# இலக்கு

GLOBAL TAMIL MEDIA CENTER

வாராந்த மின்னிதழ்

ilakku.org

SUBSCRIBE US! youtube.com/c/IlakkuWeb

LIKE US! facebook.com/ilakku.ilakku.10

FOLLOW US! twitter.com/Ilakku1

இதழ் 289 | சனி, ஜூன் 01, 2024 | 15 பக்கங்கள்




## தமிழர்களின் வரலாற்றுப் பொக்கிசமான யாழ் நூலக படுகொலைகள் !


44ஆவது நினைவு நாள் -01.06.2024

வல்வை: ந.அனந்தராஜ்



## தேர்தலுக்கான திட்டங்களும் கட்சிகளின் உபாயங்களும்

அகிலன்





பத்திரிகையாளர் வீ.தனபாலசிங்கம் செவ்வி

# தேர்தல்களை எதிர்கொள்ள ரணில் முன்னுள்ள சவால்


info@ilakku.org



© 2024 இலக்கு இணையம்

## திருகோணமலை விவசாய காணிகளை வெளி நாட்டுக்கு விற்பனை - மக்கள் எதிர்ப்பு

திருகோணமலை முத்துநகர் கிராம மக்களின் குடியிருப்பு, விவசாய காணிகளை வெளிநாட்டுக்கு மற்றும் தனியார் நிறுவனத்திற்கு இலங்கை துறைமுக அதிகாரசபையின் மூலம் வழங்கப்பட உள்ளதாக முத்துநகர் கிராம மக்கள் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹரூபின் கவனத்திற்கு கொண்டு வந்ததுக்கு அமைவாக முத்துநகர் கிராமத்திற்கு சென்று பொதுமக்களுடன் கலந்துரையாடல் ஒன்றை அண்மையில் நடத்தியிருந்தார்.



நமது மாவட்ட பூர்வீக காணிகளையும் நமது மக்கள் வாழ்த்து வரும் நிலத்தினையும் நமது மக்களின் வாழ்வாதார விவசாய காணிகளையும் வெளிநாட்டவர்களுக்கு கூறு போட்டு விக்கும்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## திருகோணமலையில் மாணவர்களின் சந்தை நிகழ்வு



திருகோணமலையில் உள்ள பத்தாம் குறிச்சி அறிவு ஒளி மையத்தின் முத்தமிழ் மாணவர் மன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை(28) மாணவர்களால் சந்தை ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

முத்தமிழ் மாணவர் மன்றப் பொதுச் செயலாளர் இளங்கோவன் ரிஷிகவி மற்றும் பொருளாளர் தினேஷ்குமார் சாத்விகா தலைமையில், திரன்சார் அபிவிருத்தித் துறைச் செயலாளர் சித்தார்த்தன் லிதுர்ஷன், சுகாதாரத் துறைச் செயலாளர் இளங்கோவன் டிலுக்ஷாயினி, செயலாற்றுக் குழு உறுப்பினர் நிஷாந்தன் பவிநயா மற்றும் நிலோஜ் வர்ஷனா ஆகியோரால் சிறப்பான முறையில் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.

இத்திட்டத்தின் மூலம் கிடைக்கப் பெரும் வருமானம் மாணவர் மன்றச் செயற்பாடுகளுக்காக

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## உக்ரைனுக்கு ஆயுதம்
### ரஷ்ய-இலங்கை உறவில் விரிசல்



உக்ரைனுக்கு ஆயுதம் வழங்குவதில் இலங்கை நிறுவனம் ஒன்று ஈடுபட்டுள்ளதாக ரஷ்யா அரச செய்தி நிறுவனம் குற்றம் சுமத்தியுள்ளது. இதன்படி, இராணுவ உபகரணங்களை உக்ரைனுக்கு வழங்க போலந்து நிறுவனம் ஒன்றுடன் இலங்கை நிறுவனம் இரகசிய கலந்துரையாடல்களில் ஈடுபட்டுவருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் காலவதியான இராணுவ உபகரணங்களை போலந்துக்கு அனுப்பி அங்கிருந்து உக்ரைனுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இராணுவ உபகரணங்களில் காணப்படும் இலக்கங்களை மறைத்து புதிய இலக்கங்களுடன் கப்பல் மூலமாக போலந்துக்கு ஆயுதங்களை அனுப்ப திட்டமிடப்பட்டுள்ளதாக அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் ரஷ்யாவுக்கும் இலங்கைக்குமான உறவில் விரிசல் ஏற்படும்அபாயம்காணப்படுவதாக

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

## இலங்கையில் இருந்து திட்டமிடப்பட்ட
## இந்தியா மீதான தாக்குதல்

குஜராத்தில் கைது செய்யப்பட்ட ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பைச் சேர்ந்தவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் நான்கு இலங்கையர்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள குஜராத்தின் பயங்கரவாத தடுப்பு பிரிவினர் கொழும்புக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளனர்.

இலங்கை அரசாங்கம் இந்த விவகாரம் தொடர்பில் இரண்டு பேரை கைது செய்துள்ளது. குஜராத்தில் கைதானவர்களுடன் இந்த இருவரும் தொடர்பில் இருந்ததாகக் கூறப்படுகின்றது.

எனினும் மற்றொருவரான

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## மருத்துவத்துறைக்கு மோசமாக அமைந்த ஆண்டு

கடந்த 10 வருடங்களில் மருத்துவத்துறை மீது கடந்த வருடம் மிகவும் மோசமாக தாக்குதல்கள் அதிகரித்துள்ளதாக The Safeguarding Health in Conflict Coalition என்ற அமைப்பு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.



இந்த அமைப்பு கடந்த 11 வருடங்களாக போர் நிகழும் இடங்களில் மருத்துவத்துறை மீதான தாக்குதல்கள் குறித்த தகவல்களை சேகரித்து வருகின்றது.

2023 ஆம் ஆண்டு 2,562 தாக்குதல்கள் மருத்துவமனைகள்இ அதன் வாகனங்கள் மற்றும் மருத்துவத்துறை பணியாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 25 விகிதம் அதிகரிப்பாகும்.


பாலஸ்தீனத்தில்அதிகதாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு அங்கு 761 தாக்குதல்கள் வைத்தியசாலைகள், மருத்துவ நிலையங்கள், மருத்துவப் பணியாளர்கள், நோயாளர் காவு வாகனங்கள் என பல தாக்கப்பட்டுள்ளன. இஸ்ரேலின் வான் தாக்குதல்கள், பீரங்கித் தாக்குதல்கள் மற்றும் டாங்கிகளின் தாக்குதல்களில் அதிகளவான சேதங்கள் ஏற்பட்டுள்ளன. பல தாக்குதல்களில் மருத்துவர்க

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## யேமன் ஹூதீஸ் படையினரின் தாக்குதலில் கப்பல் சேதம்

கடந்த செவ்வாய்க்கிழமை(28) ஏமனின் ஹதீஸ் அமைப்பினர் மேற்கொண்ட ஏவுகணைத் தாக்குதலில் கிறீக் நாட்டைச் சேர்ந்த மார்ஹல் தீவுகளின் கொடியுடன் பயணித்த லக்ஸ் என்ற சரக்குக் கப்பலே செங்கடலில் ஏமன் கரையில் இருந்து 85 கி.மீ தொலைவில் வைத்து தாக்குதலுக்கு உள்ளாகியிருந்தது.

3 ஏவுகணைகள் நேரிடையாககப்பலில் வீழ்ந்து வெடித்ததால் கப்பல் கடுயைமாக சேதமடைந்துள்ளது. கப்பலில் உக்ரைன்,



ஏகிப்த்து மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த 23 பேரும் 3 பாதுகாப்பு படையினரும்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## அமெரிக்க தேர்தலில் ரம்ப் – மஸ்க் கூட்டணி



இந்த வருடம் அமெரிக்காவில் இடம்பெறவுள்ள தேர்தலில் அமெரிக்காவின் முன்னாள் அதிபர் டொனால்ட்றம்ப் வெற்றிபெற்றால் ரெஸ்லா மற்றும் ருவிட்டர் ஆகிய நிறுவனங்களின் தலைவரும், செல்வந்தருமான எலோன் முஸ்க்கை தனது ஆலோசகராக நியமிக்கத் திட்டமிட்டுள்ளதாக அமெரிக்காவின் வோல்ட் ஸ்றீட் ஊடகம் தெரிவித்துள்ளது.

கடந்த சில மாதங்களாக இருவருக்குமிடையில் தனிப்பட்ட

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## பிரித்தானியா நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது – ஜூலையில் தேர்தல்

பிரித்தானியா நாடாளுமன்றம் கடந்த வியாழக்கிழமை(30) கலைக்கப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் ஜுலை மாதம் பொதுத் தேர்தலை நடத்துவதற்கான அறிவித்தலும் விடுக்கப்பட்டுள்ளது. 650 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான தேர்தல் தொடர்பான பரப்புரைகள் எதிர்வரும் 5 வாரங்கள் இடம்பெறவுள்ளன.

பிரித்தானியாவில் பொதுத் தேர்தல்இந்தவருடத்தின்இறுதியில் இடம்பெறவிருந்தபோதும் அண்மையில் இடம்பெற்ற உள்ளூராட்சி தேர்தலில் ஆளும் கொன்சவேட்டிவ் கட்சி படுதோல்விடைந்தும், கருத்துக் கணிப்புக்கள் கொன்சவேட்டிவ் கட்சிக்கு எதிராக இருப்பதும் தற்போதைய பிரதமர் ரிசி சுனாக்கை தேர்தலை விரைவாக வைப்பதற்கான அழுத்தங்களை



தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## சட்ட விரோத புலம் பெயர்வுகளை தவிர்ப்போம்

*சர்வதேச நாடுகளுக்கான புலம் பெயர்வு என்பது இடம் பெறுவது வழக்கம் ஆனாலும் பாதுகாப்பற்ற சட்ட விரோதமான புலம் பெயர்வினை தவிர்த்துக் கொள்வது நல்லதொரு விடயமாகும். ஒரு நாட்டுக்கு தொழிலுக்காக செல்லும் போது இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் ஊடாக பதிவு செய்வதே சிறந்தது. சுற்றுலா விசாவில் சென்று தஞ்சம் கோரிய நிலையில் புலம் பெயர்வுகளை ஏற்படுத்துவதால் பல ஆபத்துக்களை சந்திக்க நேரிடும். வட கிழக்கில் அண்மைக் காலமாக கடல் மார்க்கமாக சட்ட விரோதமாக படகு மூலம் அவுஸ்திரேலியாவுக்கு பலர் சென்ற நிலையில் அவர்கள் திருப்பி அனுப்பப் பட்டுள்ளனர்.*



*பாதுகாப்பான புலம் பெயர்வு தொடர்பில் புலம்பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பு (IOM) இது தொடர்பில் பல விழிப்புணர்வு நிகழ்வுகளை பிரதேச செயலக மட்டத்தில் கிழக்கு மாகாணத்தில் நடாத்தி வருகின்றனர். மட்டக்களப்பில் உள்ள IOM காரியாலயம் மூலமாக குறித்த நிகழ்வுகள் பிரதேச செயலகங்கள் ஊடாக அமைக்கப்பட்ட புலம்பெயர்வு சங்கங்களின் உறுப்பினர்களுக்கு நடாத்தப்பட்டு வருகிறது.*

*புலம்பெயர்வுஎன்பதுஒருசர்வதேசஎல்லையைக் கடந்து அல்லது ஒரு நாட்டின் எல்லைக்குள் தனிநபர்கள் தாங்கள் வசித்து வந்த வழக்கமான வதிவிடத்திலிருந்து அகன்று பிரிதொரு இடத்துக்கு செல்வதாகும்.*

*பொருளாதார நிலை காரணமாக புலம்பெயர்வு களை அமைத்துக் கொள்கின்றனர்கள். இது தவிர பாதுகாப்பின்மை, அரசியல் ஸ்திரத்தன்மை போன்றன புலம் பெயர்வுக்கான பிரதான காரணங்களாக காணப் படுகின்றன. சட்டரீதியாக தொழிலுக்காக புலம் பெயர்வினை மேற்கொள்ளும் போது நம்பகமான வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்யப்பட்ட முகவர் நிலையங்களை தெரிவு செய்ய வேண்டும் என்பதைடன் தொழில் சட்ட ஒப்பந்தங்கள் தொடர்பிலான தெளிவுகளையும் பெற வேண்டும்.*

*சரியான புலம் பெயர்வுகள் தொடர்பாக பல நிகழ்வுகளை ஐ.ஓ.எம் கிழக்கில் நடாத்தி வருகிறது திருகோணமலை மாவட்டத்தில் அண்மைக் காலமாக கடல் வழியாக புலம் பெயர்வுகளை அமைத்து பல இளைஞர் யுவதிகள் பல இலட்சங்கள் பணத்தை வீணாக்கி ஏமாந்து மோசடிகளுக்குள் அகப்பட்ட பல விடயங்கள் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.*

*தொழிலுக்காக புலம் பெயர்வுகளை மேற் கொள்ளும் போது செல்லுபடியான கடவுச் சீட்டு, செல்லுபடியாகும் விசா, குடும்பப் பிண்ணனி அறிக்கை பெண் புலம்பெயர்வாளராக இருப்பின் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகள் இருந்தால் (வயது 45க்கு கீழ் உள்ள பெண்கள்) இது கட்டாயமாகும், சுகாதார மதிப்பீட்டு அறிக்கை, தேசிய தொழிற் தகைமை சான்றிதழ், பொலிஸ் அறிக்கை, தொழில் ஒப்பந்தம், விமான பயனச் சீட்டு, பயணக் காப்புறுதி, வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்தல் போன்றன பாதுகாப்புக்கான தொழில் நிமித்தம் புலம் பெயர்வுகளை அமைத்துக் கொள்ளும் போது இவ் விடயங்களை கட்டாயம் கடைப் பிடிப்பதன் மூலம் ஒழுங்கு முறையான புலம் பெயர்வாக காணப்படுகிறது.*

*இது போன்ற நல்ல பல விடயங்கள் இதன் மூலமாக ஏற்படுத்தப்படுகிறது. நாட்டுக்கான அந்நியச் செலவாணி அதிகரிக்கப்படுகிறது. கல்வி தேவைகள், தொழில் நிமித்தம் என புலம் பெயர்வுகளை அமைத்துக் கொள்கின்றனர். மத்திய கிழக்கு நாடுகளுக்காக வேலை*

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## படித்தோர் குழாத்து சனநாயகத்தால் இறைமை இழப்படையும் ஈழத்தமிழர்

இலங்கைத் தீவில் பொதுவாகவும் ஈழத்தில் சிறப்பாகவும் இறைமை இழப்புக்குப் பிரித்தானிய காலனித்துவம் உருவாக்கிய படித்தோர் குழாத்து சனநாயக முறைமை மூலகாரணமாக உள்ளதா? இலங்கைத் தீவில் முதன் முறையாக 1910 இல் மட்டுப்படுத்தப்பட்ட தேர்தல் மூலமே இலங்கையர்க்கான பிரதிநிதியைத் தேர்ந்தெடுத்த தேர்தல் நடாத்தப்பட்டது. ஆங்கிலம் படித்த சொத்துடைமையுள்ளவர்களுக்கு வாக்குரிமை என்ற அடிப்படையிலேயே இந்தத் தேர்தல் நடாத்தப் பெற்றது. இந்தத் தேர்தலில்தான் சேர். பொன்னம்பலம் இராமநாதன் இலங்கையர் முழுவதற்குமான பிரதிநிதியாகத் தெரிவானார்.

இந்தப் படித்தோர் குழாம் தமிழரிலும் சிங்களவரிலும் முஸ்லீம்களிலும் இந்தியத் தமிழரிலும் இருந்து கொழும்பை நோக்கி நகர்ந்து குடியேறிய நாள் முதல் இன்று வரை கொழும்பு அரசியல் என்பது இலங்கையின் சாதாரண குடிமக்களின் அரசியல் விருப்புக்களில் இருந்து மாறுபட்டதாக வேறுபட்டதாகவே உள்ளது.

தேசியங்களை பேசுவார்கள் ஆனால் தேசியங்களின் வளர்ச்சிக்கு வாழ்வை அர்ப்பணித்து உழைக்க மாட்டார்கள். மொழி, மத, சாதிய, பிரதேச வேறுபாடுகளை வளர்ப்பதன் மூலம் சாதாரண மக்களிடை ஒற்றுமையீனத்தை வளர்த்து, ஒன்றுபட்ட மக்கள் சக்தி மக்கள் போராட்டங்களாக மாறித் தங்களின் அரசியல் மேலாண்மை இருப்பை மாற்றுவதை தடுத்து நிறுத்துவதில் இவர்கள் வல்லுநர்கள். 1949 நவம்பரில் இந்தியத் தோட்டத் தொழிலாளர்கள் குடியுரிமைப் பறிப்பு நாட்டின் பொருளாதார மசோதாவாகவே ஜே ஆர் ஜயவர்த்தனாவால் கொண்டுவரப்பட்டது. 1956 யூன் 5இல் எஸ் டபிள்யூ. ஆர். டி பண்டாரநாயக்காவால் சிங்களம் மட்டும் சட்டம் ஆங்கிலக்கல்வி முறைக்கு மாற்றீடாக ஏழை மக்களுக்குச் சொந்த மொழிக் கல்வியை அளிக்கும் மக்கள் நலத்திட்டமாகவே முன்னெடுக்கப்பட்டது. அவ்வாறே 1965 இல் ஐக்கிய தேசியக் கட்சியின் கல்வி அமைச்சர் ஐ. எம். ஆர் ஏ இரியக்கொலை பல்கலைக்கழகத் தரப்படுத்தலைக் கொண்டு வந்த போதும் எல்லாருக்குமான வாய்ப்பளித்தல் என்றே பேசப்பட்டது.

உண்மையில் கடந்த 114 ஆண்டுகளாக இலங்கைத் தீவில் தொடரும் இந்த படித்தோர் குழாத்து அரசியலுக்கு மண்ணைக்காத்தல் மக்களைக் காத்தல் என்பதை விடக் கூட்டணி அமைத்து ஆட்சியில் பங்கேற்றல், பிராந்திய உலக வல்லாண்மைகளுக்கு மக்களின் மனிதவலுவையும் நாட்டின் மூலவளங்களையும் சேவைகள் ஏற்றுமதியாகவும் பொருட்கள் ஏற்றுமதியாகவும் மாற்றி நிதியாக்கம் செய்தல் என்பவற்றிலேயே அக்கறையும் ஆர்வமும் அதிகம்.

இன்றும் சிறிலங்கா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்காவின் திட்டங்கள் எல்லாமே இந்த படித்தோர் குழாத்து சனநாயக அரசியலின் உதாரணங்களாகவே உள்ளன. இதனைக் கடந்த வாரத்தில் கொழும்பில் நிகழ்ந்த முனைவர் தயான் ஜயதிலக்கவின் 'தலையீடுகள் - தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் கட்டுரைகள்' (Interventions. Selected Political Writings) நூல் வெளியீட்டு நிகழ்ச்சியில் சிங்களப் புத்திஜீவிகள் கொள்கை வகுப்பாளர்கள் கருத்துருவாக்கிகள் பேராசிரியர்களிடையான உரையாடல்களில் காணக்கூடியதாக இருந்தது.

தேசிய சமாதானப் பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜெகான் பெரேரா 'சிங்களப் பெரும்பான்மையினரை மையப்படுத்தியே சிங்கள அரசாங்கம் தீர்மானங்களை எடுக்கிறது - இதன் காரணமாக வடக்கு கிழக்கு மக்களின் பிரதிநிதிகள் புறக்கணிக்கப்பட்டு வருவது தேசியப் பிரச்சனை - இலங்கையின் ஒருதலைபட்ச தீர்மானங்கள் சிங்கள மக்களிடை ஒற்றுமையை ஏற்படுத்த உதவினாலும் வடக்கு கிழக்கால் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்ற தோற்றப்பாட்டையே கட்டியெழுப்பி உள்ளது' என்ற கருத்தினை முன்வைத்தார். இங்கு ஈழத்தமிழரின் தேசியப் பிரச்சினை அவர்களின் இறைமை குறித்தது என்ற நிலையை மாற்றி வடக்கு கிழக்குப் பிரதிநிதிகளின் புறக்கணிப்பு என்ற கருத்துருவாக்கம் அமைகிறது.

இந்து சமுத்திரம் - அமெரிக்க பிரித்தானிய செல்வாக்கு நாடுகளுக்கு கடற்பயண ஒழுங்குகளுக்கும் - யப்பான் தென்கொரியாவுக்கு தங்கள் கடல்சார் ஆர்வங்களுக்கும்-அவுஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகள் எல்லைதாண்டலைத் தடுப்பதற்கு எல்லைப் பாதுகாப்புக்கும்-சீனாவுக்கு ஆய்வுகள் கடற்போக்குவரத்து தேவைகளுக்கும்-முக்கியத்துவம் பெறுகிறது என்ற முனைவர் சரத் அமுனுகம-இதனை சரியான முறையில் சிறிலங்கா பயன்படுத்தி பயன்பெற வேண்டும் என்ற கருத்தை வெளியிட்டார். ஆனால் இந்து சமுத்திரத்தில் இலங்கைத் தீவின் பெரும்பகுதியை உள்ளடக்கிய ஈழத்தமிழர்களின் மேல் இந்துசமுத்திரத்தை அனைத்துலக நாடுகளுடைய போட்டிக்கு உட்படுத்துவதால் ஏற்படும் பாதிப்புக்கள் குறித்து எவருக்கும் அக்கறையில்லை.

குளோபல் சவுத் என்னும் தெற்கு உலகம் குறித்து அக்கறை காட்டும் ஜனாதிபதி சிறிலங்காவைக் குழுக்களாக வரைவுப்படுத்தப்படும் நிலையில பழகுவதில் இருந்து வெளிவந்து பரந்துபட்ட கூட்டாண்மையை வெளிப்படுத்தலுக்கு ஏற்ற முறையில் எல்லா நாடுகளையும் உள்வாங்கி தனது வெளிவிவகாரக் கொள்கைகளை வகுப்பதாக முனைவர் தயான் ஜயதிலக்க பாராட்டுத் தெரிவித்தார். இந்த சிங்களப் பேராசிரியர்களும் கொள்கை வகுப்பாளர்களும் கருத்துருவாக்கிகளும் தங்கள் சிங்கள நாடாகவே இலங்கைத் தீவைக் கருதி அதில் வாழும் வடக்கினதும் கிழக்கினதும் மக்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரப் பகிர்வைச் செய்து உலகநாடுகளிலும் உலக அமைப்புக்களிலும் ஈழத்தமிழர்க்குச் சாதகமாக வளர்ந்து வரும் புதிய நிலை ஈழத்தமிழர் இறைமையை அங்கீகரிக்கு முன்பு நாட்டின் வடக்கு கிழக்கு சமுதாயத்தின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு விட்டதாக உலகுக்கு வெளிப்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளார்கள்.

இந்நிலையில் ஈழத்தமிழர்களின் படித்தோர் குழாத்து சனநாயகத்தின் அரசியல்வாதிகளும் பேராசிரியர்களும் சிங்கள இறைமைக்குள் தீர்வு பெறப் பேசும் நிலையை மாற்றாவிட்டால் இவர்களே ஈழத்தமிழரின் இறைமை இழப்புக்கு காரணமாகிவிடுவார்கள் என்ற அச்சத்தை இலக்கு சுட்டிக்காட்ட முனைகிறது.

**ஆசிரியர்**

# தேர்தலுக்கான திட்டங்களும் கட்சிகளின் உபாயங்களும்

அகிலன்

ஜனாதிபதித் தேர்தலை நோக்கிய அரசியல் நகர்வுகள் சூடுபிடித்திருக்கும் நிலையில், முக்கியமான அரசியல் நிகழ்வுகள் இரண்டு கடந்த வாரத்தில் எதிர்பார்க்கப்பட்டிருந்தன. முதலாவது ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி தேர்தலில் தான் போட்டியிடுவது குறித்து உத்தியோகபூர்வ அறிவித்தலை வெளியிடுவார் என பார்க்கப்பட்டது. இரண்டாவதாக பிரதான எதிர்க்கட்சி வேட்பாளரான v ஆகி யோரிடையே பகிரங்க விவாதம் ஒன்று இடம் பெறும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இந்த இரண்டுமே இடம்பெறவில்லை.

ரணில் தனது அறிவிப்பை இன்னும்



காலந்தாழ்த்தி வருகின்றார். அதேபோல பகிரங்க விவாதம் தமக்கு பாதகமான விளைவுகளை ஏற்படுத்திவிடலாம் என்ற அச்சம் சஜித்துக்கும் அநுரவுக்கும் இருக்கலாம். ஆனால், இருவருமே விவாதத்துக்கு தாம் தயாராக இருப்பதாகச் சொல்லி வருகின்றார்கள். இவ்வாறான ஒரு விவாதம் இடம் பெற்றால், அது தமக்கு சாதகமாக அமையும் - இருவரும் தமக்குள் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொள்வார்கள் என்று ரணிலும் காத்திருந்தார். ஆனால், இவ்வாறான ஒரு விவாதம் இடம்பெறுமா என்பதும் தெரியவில்லை.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி தேர்தலில் தான் போட்டியிடுவது குறித்து உத்தியோகபுர்வமாக அறிவிப்பார் என நீண்ட காலமாகவே எதிர்பார்க்கப்பட்டு வந்தது. இருந்த போதிலும் கருத்துக்கணிப்புக்கள், மற்றும் அரசியல் சூழ்நிலையில் என தனக்கு சாதகமாக வரும் நிலை ஒன்றுக்காக அவர் காத்திருக்கிறார் என்பது தெரிகின்றது. அதனைவிட, தேர்தலில் போட்டியிடுவது குறித்த தறிவிப்பை வெளியிட்டால், அதன் பின்னர் அபிவிருத்தித் திட்டங்கள் மூலமான மறைமுக பரப்புரைகளை முன்னெடுப்பது தேர்தல் விதிமுறை மீறலாகப் பார்க்கப்படலாம்.

அவ்வாறிருந்தாலும், தேர்தலுக்கான தயாரி



ப்புகள் அனைத்திலும் அவர் தீவிரமாக இறங்கி இருப்பதை காணக்கூடியதாக இருக்கின்றது. ஒருபுறம், தனக்கு ஆதரவான அரசியல் சக்திகளை ஒன்று திரட்டுவதற்கான முயற்சிகளை அவர் மேற்கொள்கின்றார். இதன்மூலம் புதிய அணி ஒன்றை உருவாக்குகின்றார். மறுபுறம் மக்கள் மத்தியில் நேரடியாக சென்று தன்னுடைய பொருளாதார வெற்றிகளை சந்தைப்படுத்துகின்றார். வட மாகாணத்திற்கு அவர் கடந்த வாரம் மேற்கொண்ட விஜயம் இவ்வாறான ஒரு நோக்கத்தை கொண்டதாகவே இருந்தது. அதில் தனக்கு கணிசமான வெற்றி கிடைத்திருப்பதாகத்தான் அவர் கருதுகின்றார்.

ஐக்கிய தேசியக் கட்சி முழுமையாகவும் பொது ஜன பெரமுன கட்சியின் ஒரு பிரிவினரும் தங்களுடைய ஆதரவை ரணிலுக்கு வெளிப்படுத்தி இருக்கின்றார்கள். இலங்கையின் மூத்த கட்சிகளில் ஒன்றான சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ரணிலையே ஆதரிக்கலாம் என எதிர்பார்க்கப் படுகின்றது. சுதந்திரக் கட்சிக்குப் பலமான ஒரு தலைவர் இல்லாமையும், அக்கட்சி இரண்டு அல்லது மூன்று பிரிவுகளாகப் பிளவுபட்டுப் போயிருப்பதும் இதற்குக் காரணம். சந்திரிகா தன்னுடைய அணியுடன் ரணிலை ஆதரிப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது. இரு வாரங்களுக்கு முன்பாக அவர்கள் இருவரும் இது குறித்து இரகசியமாக சந்தித்துப் பேசியுள்ளார்கள்.

மறுபுறம் பிதான எதிர்க்கட்சியாக ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி.க்கள் சிலருடனும் ரணில் விக்கிரமசிங்க பேச்சுக்களை இரகசியமாக நடத்திக் கொண்டிருக்கின்றார். யார், யார் இணைவார்கள் என்பது இறுதி நாட்களில்தான் வெளிப்படும். ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி.க்கள் சிலர் மே தினத்தன்று ரணிலுடன் இணைவார்கள் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும், அது நடைபெறவில்லை. "இப்போது அவசர மில்லை" என ரணில் சொன்னதால், அவர்களது கட்சித் தாவல் தந்திரோபாய ரீதியாக தாமதப்படுத்தப் பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

2015 ஜனாதிபதித் தேர்தலின் போது, இறுதி



நேரத்தில்தான் மைத்திரிபால சிறிசேன எதிர்க் கட்சிகளின் பொது வேட்பாளராகக் களமிறக்கப் பட்டார். அது மகிந்த ராஜபக்ஷவுக்கு கடும் அதிர்ச்சியைக் கொடுத்தது. இறுதிக் கட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட அந்த நகர்வுக்கு எதிராக மகிந்த ராஜபக்ஷவினால் எதனையும் செய்ய முடியவில்லை. அதேபோன்ற ஒரு அதிர்ச்சியை சஜித் பிரேமதாஸவுக்குக் கொடுப்பதற்கு ரணில் தரப்பு விரும்புவது போலத் தெரிகின்றது. அதனால்தான் இந்தத் தாமதப்படுத்தல் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சஜித் அணியில் உட்கட்சி மோதல்கள் தீவிரமடைந்திருக்கின்றது. இது தனக்குக் கிடைத் திருக்கும் ஒரு வாய்ப்பு என ரணில் விக்கிரமசிங்க கணக்குப் போகின்றார். சரத் பொன்சேகா ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளராக தன்னைப் போடவில்லை என்றால், தான் தனியாகச் சென்று சுயாதீனமாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப்போவதாக அறிவித்திருக்கின்றார். முன்னாள் இராணுவ உயர் அதிகாரிகள் பலரை கட்சிக்குள் இணைத்துக்கொண்டிருப்பதால், சரத் பொன்சேகா அதிருப்தியடைந்திருக்கின்றார். கட்சிக்குள் தன்னுடைய முக்கியத்துவம் குறைந்து விடும் என்ற அச்சம் அவருக்கு. இவை அனைத்தும் ரணிலுக்கு சாதகமான அம்சங்கள்.

இதனைவிட வடக்கு, கிழக்குத் தமிழ்



மற்றும் முஸ்லிம் வாக்குகள் தமக்குக் கிடைக்கும் என ரணில் முழுமையாக நம்புகின்றார். தமிழ்க் கட்சிகள் சில பொது வேட்பாளர் என்ற கருத்தை முன்வைத்து காய்களை நகர்த்திக் கொண்டிருந்தாலும், அது சாத்தியமாகப் போவதில்லை என ரணில் சொல்கின்றார். கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் விக்னேஸ்வரனைச் சந்தித்த போதும் அவர் அதனைத்தான் சொன்னார். 2015 இல் மைத்திரியின் வெற்றியை உறுதிப்படுத்தியது சிறுபான்மையினரின் வாக்குகள்தான். அந்த வகையில் சிறுபான்மையினரது வாக்குகள் குறிப்பாக தமிழ் மக்களுடைய வாக்குகள் இம்முறை தேர்தலில் தீர்மானிக்கும் சக்தியாக இருக்கும்.

தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை களமிறக்குவது என்ற திட்டத்துடன் தமிழ்த் தேசியக் கட்சிகள் சிலவும், பொது அமைப்புக்கள் சிவில் அமைப்புக்களும் தீவிரமாகச் செயற்பட்டுவருகின்றன. ஆனால், இந்த விடயத்தில் இணைந்திருக்கும் தமிழ்க் கட்சிகள் சில அந்தக் கொள்கையில் உறுதியாக இருக்குமா என்பது கேள்விக்குறியாகத்தான் இருக்கின்றது. ரணில் விக்கிரமசிங்க கடந்த வாரம் யாழ்ப்பாணம் வந்திருந்த போது, அதில் குறிப்பிட்ட சில எம்.பி.க்கள் பங்குபற்றியிருந்தமையும், அதில் அவர்கள் நிகழ்த்திய உரைகளும் இந்தக் கேள்வியைத்தான் எழுப்பியிருந்தன.

இம்முறை சிறுபான்மையினரின் வாக்கு



களை பொது வேட்பாளர் பெறவில்லை எனில் அதனைப் பங்கு போடுவதற்கு சஜித்தும் ரணிலும் முயல்வார்கள் என்பது வெளிப்படை. மலையகக் கட்சிகளில் தமிழ் முற்போக்கு கூட்டணி மற்றும் முஸ்லிம் கட்சிகள் இன்றுவரையில் சஜித்துக்கு ஆதரவாகத்தான் உள்ளன. அந்தக் கூட்டணியில் தான் அவர்கள் இருக்கின்றார்கள். ஜீவன் தொண்டமானின் இ.தொ.கா. ரணிலுக்கு ஆதரவாக இருக்கின்றது. வடக்கு, கிழக்கில் அரசுடன் உள்ள தமிழ்க் கட்சிகள் ரணிலை ஆதரிக்கின்றன. ஈ.பி.

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# தமிழர்களின் வரலாற்றுப் பொக்கிசமான
# யாழ் நூலக படுகொலைகள் !

## 44ஆவது நினைவு நாள் -01.06.2024

**பாகம் 2**

1981 மே 31 நள்ளிரவு தொடக்கம் ஜுன் மாதம் 01ஆம் திகதிவரை யாழ்ப்பாணத்திலேயே தங்கி நின்று எழில் நிறைந்த யாழ்ப்பாணத்தையே சாம்பல் மேடாக்கிய கொடியவர்களினால், யாழ் நூலகம் எரித்தழிக்கப்பட்ட வரலாற்றுப்பண்பாட்டு படுகொலையின் சூத்திரதாரியாக இருந்து சிங்கள பேரினவாதிகளுக்குத் துணை போனவர், அப்போதைய பொலிஸ் அதிகாரியாக இருந்த ஒரு தமிழரான ஐக்கிய தேசிய கட்சியின் ஆரம்பகால உறுப்பினர் என்பதை நினைக்கும் பொழுதே எங்கள் நெஞ்சங்கள் கொதிக்கின்றன. இருந்தும் கெடுத்தார், செத்தும் கெடுத்தான் என்பதற்கு அடையாளமாக விளங்கிய தம்மிஸ்டர் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் தலைமையிலான ஆட்சியில் அவரது இரு அமைச்சர்களினால் நூலகம் எரிக்கப்பட்டமை தொடர்பாக உலக நாடுகளில் இருந்தும் கண்டனங்கள் எழுந்தவுடன் அதில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக, "இதில்தான்சம் பந்தப்படவில்லை என்றும் யாழ்ப்பாண நூலகத்தைத் தீயிட்டவர் காமினி திசநாயக்காவே என்று ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார். இதன் மூலம் யாழ் பொது நூலகத்தைத் தமது அரசாங்கமே எரித்தது என்ற உண்மையையும் வெளிப்படுத்தியிருந்தார்.


சதம் 60
யாழ்.நூலகத்தை எரித்த பொலிசாரில் சிலர் யூனிபோம் அணிந்திருந்தனர்
மாநகரசபை காவலாளி சாட்சியம்

1981 மே 31 மாலை வேளையில் கொக்குவில் சம்பியன் வீதியில் இருந்த அவரது வீட்டில், அன்றைய ஐக்கிய தேசியக்கட்சியின் அமைச்சர் காமினி திசநாயக்கா தலைமையில் தென்னிலங்கையில் இருந்து வந்த காடையர் கூட்டத்துடன் வருகை தந்திருந்த பொலிசார் அந்த வீட்டு முற்றத்தில் குடிபோதையில் கூத்தடித்துக் கொண்டிருந்தனர். அதன் பின்னரே மறுநாள் அந்தக் காடையர்கூட்டம், புனிதம் நிறைந்த தமிழ் மக்களின் அறிவுப் பெட்டகத்தைத் தீயிட்டுக் கொழுத்தியது. இந்தப் பாதகமான வன்செயலான நூலக எரிப்பு கடந்த இருபதாம் நூற்றாண்டில் நடந்த மிகப் பெரும் இன அழிப்பு வன்முறையாகவே பார்க்கப் படுகின்றது. பொலிஸ்மா அதிபரும், பிரிகேடியர் வீரதுங்காவும் யாழ்ப்பாணத்தில் பொலிஸ் நிலையத்தில் தங்கிறின்ற பொழுதே பொலிஸ் காடையர்களினால் நூலகம் தீயிட்டுக் கொழுத்தப்பட்டது. அதுவும் நூலகத்தில் இருந்து சுமார் 800 மீற்றர் தூரத்திலேயே யாழ் பொலிஸ் நிலையம் அமைந்துள்ள நிலையில் நூல் நிலையம் எரிக்கப்பட்டது.

ஒரு இனத்தை அழிக்க வேண்டுமானால் அதன் பண்பாட்டை, அதன் அறிவுசார்ந்த ஆவணங்களை மட்டுமல்லாது, அந்த இனத்தின் வரலாற்றையே எவ்வித தடயங்களும் அற்ற நிலையில் அழித்து விடவேண்டும் என்பது உலகின்



பயங்கரவாத அரசுகளினால் பின்பற்றப்படுகின்ற இனஅழிப்புக் கொள்கைகளில் ஒன்றாகவே இந்த நூலகப் படுகொலை விளங்குகின்றது. அந்த வகையிலேயே ஒரு 100 தமிழர்களைக் கொன்று அழிப்பதைவிட அந்த மக்களின் கல்வி, பண்பாட்டு, கலை வடிவங்களைக் கொன்று அழித்து விடுவதை இலக்காகக் கொண்டே, ஈழத்தின் பொக்கிசமாக விளங்கிய யாழ்ப்பாண பொது நூலகம் அழிக்கப்பட்டது. அந்த இனஅழிப்பு நடவடிக்கை போன்ற பல இனப்படுகொலைகளை இன்றும் கூட பேரினவாத அரசுகளினால் கன கச்சிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.



**வல்வை: ந.அனந்தராஜ்**


Jaffna public library with ancient archives and stacks destroyed.

யாழ். பொதுநூலகம் 1933ஆம் ஆண்டு எம்.கே.செல்லப்பா என்பவரின் தனிமனித முயற்சியில் தனியார் நூலகமாகவே ஆரம்பிக்கப்பட்டது. அதன் பின்னர் 1936ஆம் ஆண்டுக்கு பின்னர் யாழ்.நூலகம் அன்றைய யாழ்ப்பாண மாநகரசபையினால் பொறுப்பேற்கப்பட்டது. யாழ் மாநகர சபையின் அயராத முயற்சிகாரணமாக பல்வேறு நாடுகளின் நிதியுதவி மற்றும் உலகின் பல்வேறு நாடுகளிலும் வெளியான நூல்களை எல்லாம் சேகரித்து யாழ்ப்பாண நூலகம் அபிரிமிதமான வளர்ச்சியைக் கண்டது. அதன் பின்னர் அழகான கட்டடம் அமைக்க வேண்டுமென்ற சிந்தனை உருவாகியபொழுது, தென்னிந்திய கட்டடக்கலை நிபுணர் கே.எஸ்.நரசிம்மன் அவர்களின் வடிவமைப்பில் உருவாக்கப்பட்ட மூன்று மாடிகளைக் கொண்ட திராவிடக் கட்டிட அமைப்பைக் கொண்ட ஒரு அழகிய கட்டிடமாக யாழ். நூலகம் புதுப்பிக்கப்பட்டது. புதிதாகக் கட்டப்பட்ட நூலகம் அன்றைய யாழ் மாநகர சபை மேயராக இருந்த அல்பிரட் துரையப்பாவினால், 1959ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 07ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.



தனித்தமிழ் ஈழத்திற்கான குரல்கள் ஓங்கி எழுந்த காலகட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்த இனஅழிப்பு நடவடிக்கையானது, இளைஞர்களின் ஆயுதப் போராட்டத்திற்கு வலுச்சேர்த்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

அதேபோன்று பொதுநூலகம் எரியூட்டப்பட்டதால், உளரீதியாகப் பாதிக்கப்பட்ட தமிழ் நாட்டின் பிரபல எழுத்தாளரான, "சுஜாதா" 1981-ம் ஆண்டு டிசம்பர்மாத ஆனந்த விகடன் இதழில் "ஒரு இலட்சம் புத்தகங்கள்" என்னும் தலைப்பில் பாரதி நூற்றாண்டு சிறப்புச் சிறுகதை ஒன்றின் ஊடாகத் தன்னுடைய கவலையையும்,கோபத்தையும் வெளிப்படுத்தினார். அதேநிகழ்வில் பெரிதும் கவலையுற்ற வெளிநாட்டு ஆங்கிலேய அறிஞர் ஒருவர் யாழ்ப்பாணப் பொதுமக்கள் நூலகம் எரிந்து கருகி நீறாகிக்கிடந்த சாம்பர் மேட்டிலே நின்ற வண்ணம் ஆங்கிலக் கவிதை ஒன்றையும் எழுதினார். இந்தக் கவிதையை பேராசிரியர் கைலாசபதியிடமிருந்து பெற்றுத் தமிழாக்கம் செய்து "கிருதயுகம்" என்ற ஈழத்து சிற்றிதழ்களிலே கைலாசபதியின் மறைவுக்குப் பின்னர் கவி ஞர் சோ.ப. பிரசுரித்திருந்தார். பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களின் யாழ் நுலாக எரிப்பு குறித்த கருத்தை மொழி பெயர்த்து ஆங்கில கவிஞன் ஒருவனே தனது துயரத்தை வெளிப் படுத்தினான். அதேபோன்று, போராசிரியர் எம்.ஏ.நுஃமான் அவர்கள், தனது துயரத்தைப் பின்வருமாறு உணர்ச்சிததும்பும் வகையில் கவிதையாக வடித்தார்.

*நேற்று என் கனவில் புத்த பெருமான் சுடப்பட்டு இறந்தார். சிவில் உடை அணிந்த அரச காவலர்கள் அவரை கொன்றனர்.*

தொடர்ச்சி 14ஆம் பக்கம்



# தேர்தல்களை எதிர்கொள்ள ரணில் முன்னுள்ள சவால்



**ஜனாதிபதித் தேர்தலுக்கான களம் சூடுபிடித்துள்ள நிலையில் தினமும் வெவ்வேறான செய்திகள் வெளிவந்து மக்களைக் குழப்பிக்கொண்டுள்ளன. இவை தொடர்பாக தினக்குரல் பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியர் வீ.தனபாலசிங்கம் அனைத்துலக உயிரோடைத் தமிழ் வானொலியின் தாயகக்களம் நிகழ்ச்சிக்கு வழங்கிய நேர்காணலை இலக்கின் வாசகர்களுக்காக இங்கே தருகின்றோம். இந்த நேர்காணலை காணொளியில் YouTube இல் முழுமையாகப் பார்ப்பதற்கு இங்குள்ள QR Code இனை ஸ்கான் (Scan) செய்யவும்.**

## பத்திரிகையாளர் வீ.தனபாலசிங்கம் செவ்வி

***ஜனாதிபதித் தேர்தலுக்கான ஏற்பாடுகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில், ஐ.தே.க. பொதுச் செயலாளர் இரண்டு தேர்தல்களும் இரண்டு வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்திருக்கின்றார். இதற்கு என்ன காரணம்?***

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாடு ஒன்றில் இந்தக் கருத்தை அவர் முன்வைத்திருந்தார். ஜனாதிபதித் தேர்தலையும் பொதுத் தேர்தலையும் இரண்டு வருடங்களுக்கு ஒத்திவைக்க வேண்டும் என அவர் வலியுறுத்தியிருந்தார். இதற்கான பிரேரணை ஒன்றை பாராளுமன்றத்தில் கொண்டுவர வேண்டும் என்பது ஐ.தே.க.வின் யோசனை. தேவையெனில் பொதுஜன வாக்கெடுப்பு ஒன்றுக்குக் கூட செல்லலாம் என அவர் கருத்து வெளியிட்டிருந்தார். அன்றைய தினமே இலங்கை அரசியலில் பெரும் குழப்பம் ஏற்பட்டது. எதிர்க் கட்சிகள் இதனை கடுமையாக விமர்சிக்கத் தொடங்கின.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இது தொடர்பில் பலரும் தொடர்புகொண்டு கேள்வி எழுப்பியிருந்தார்கள். தனது சார்பில் இதனை மறுத்துரைக்குமாறு ரவி கருணாநாயக்கவை ரணில் கேட்டுக்கொண்டிருந்தார். அவர்களு டைய கருத்தின்படி ஜனாதிபதித் தேர்தல் அரசியலமைப் பின்படி இவ்வருடம் ஒக்ரோபர் மாதத்தில் நடைபெறும். தேர்தல்களை ஒத்திவைப்பது அரசாங்கத்தினதோ அல்லது ஐ.தே.க.வினதோ திட்டம் அல்ல என்பதையும் அவர்கள் தெளிவு படுத்தினார்கள்.

பாலித ரங்கே பண்டார எதற்காக இதனைக் கூறினார் என்பது தெளிவாகத் தெரியவில்லை. அது தொடர்பான தெளிவுபடுத்தலை எதிர்வரும் திங்கட்கிழமை வெளிப்படுத்துவதாக அவர் கூறியிருக்கின்றார். முக்கியமான பதவி ஒன்றில் இருப்பவர் என்ற முறையில் அவரது கருத்து நிச்சயமாக கவனத்தை ஈர்க்கக்கூடிய ஒன்றுதான்.

ஜனாதிபதி தான் மீண்டும் போட்டியிடுவது குறித்து அறிவிக்கவில்லை என்ற போதிலும் கூட, அதற்கான குழுக்களை அமைத்து தேர்தலுக்கான வேலைகளை அவர் முன்னெடுத்து வருகின்றார். புலம்பெயர்ந்த ஊடகவியலாளர் ஒருவரை சில தினங்களுக்கு முன்னர் சந்தித்த ஜனாதிபதி தான் மீண்டும் போட்டியிடப்போவதாக அறிவித்தார். இனிமேலும், அவர் தனது அறிவிப்பை வெளியிடாமல் இருப்பது நடைமுறைச் சாத்தியமானதல்ல.

பொதுஜன பெரமுனவின் முக்கியமானவர்கள் சிலரே ரணில்தான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வேண்டும். அவரை விட்டால் எமக்கு வேறு தெரிவு இல்லை என்று தொடர்ந்து கூறிவரும் நிலையில், ரணில் விக்கிரமசிங்கவின் சொந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போடுவது போன்ற விடயங்களைத்தான் பேசுகின்றார்கள். அந்த வகையில், ரணிலின் ஐ.தே.க.வைச் சேர்ந்தவர்கள்தான் குழப்பமான கதைகளை முன்வைக்கின்றார்களே தவிர, பொது ஜன பெரமுனவைச் சேர்ந்தவர்கள் உறுதியாகச் சொல்கின்றார்கள்.

இதுவரையில் எட்டு ஜனாதிபதித் தேர்தல்கள் நடைபெற்றுள்ளன. ஆனால், இப்போதுள்ளதைப் போல முன்னர் எப்போதுமே குழப்பமான ஒரு நிலை இருக்கவில்லை. இதற்குப் பிரதான காரணம் என்னவென்றால், ஜனாதிபதி பொதுஜன பாராளுமன்றத்தில் பெரமுனவின் ஆதரவில்தான் செயற்படுகின்றார். அவரைப் பொறுத்தவரையில் தன்னுடைய கட்சியை நம்பி அவர் எதனையும் செய்ய முடியாதவராக இருக்கின்றார். அதாவது, அவர் ஐ.தே.க.வை நம்பி எதனையும் செய்ய முடியாத ஒரு ஐ.தே.க. தலைவராகத்தான் இருக்கின்றார். அதனால்தான் அவர் கட்சி சாராத ஆனால், பல கட்சிகளை இணைத்த ஒரு பொது வேட்பாளராக போட்டியிட முற்படுகின்றார். ஐ.தே.க. பலவீனமாக இருப்பதுதான் இதற்குக் காரணம்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக வந்த பின்னர்தான் தமது கட்சிக்கு புத்துயிர் கொடுக்க முடியும் அதனை மீட்டெடுக்க முடியும் என்ற நம்பிக்கை அவரது கட்சியினருக்கே வந்தது. ஆனால், அக்கட்சியின் முக்கிய பதவிகளில் இருப்பவர்கள் ஜனாதிபதி செயலகத்தில் பதவிகளை எடுத்துக்கொண்டு சுகபோகமாக இருக்க விரும்புகின்றார்களே தவிர, கட்சியை கீழ் மட்டத்துக்குச் சென்று வளர்த்தெடுக்கக்கூடியவர்களாக இல்லை. அவர்களால் கட்சியைக் கட்டியெழுப்ப முடியாது என்பது ரணிலுக்கும் தெரியும். ரணிலும் அவ்வாறான ஒருவர்தான். அவரது பிரச்சினைதான் இந்த ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான குழப்பம்.

ரணிலைப் பொறுத்தவரையில் அவர் பொருளாதார வீழ்ச்சியிலிருந்து நாட்டை மீட்டு வழமையான ஒரு நிலையை ஏற்படுத்தியிருக்கின்றார் என்ற நம்பிக்கை மக்கள் மத்தியில் பரந்தளவில் ஏற்பட்டிருக்கின்றது. ஆனால், அதற்காக மட்டும் அவரை மக்கள் ஜனாதிபதியாக்க முடியாது. ஏனெனில் இலங்கையில் கட்சி அரசியல் மிகவும் வலுவாக ஊன்றிப்போன ஒன்று. ஒரு வலுவான கட்சி இல்லாமல் ஜனாதிபதித் தேர்தலில் ஒருவர் வெற்றிபெறுவது சாத்தியமானதல்ல. இந்த சிக்கலான நிலையில் இருந்துகொண்டுதான் ரணில் என்ன செய்வது என திண்டாடுகின்றார். இந்தப் பின்னணியில்தான் அவரைச் சார்ந்தவர்கள்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# முள்ளிவாய்க்கால் நிலம்



**துரைராஜா ஜெயராஜா**

தமிழினப் படுகொலையின் 15ஆம் ஆண்டு நினைவேந்தல் நிறைவுபெற்றுவிட்டது. பெருமளவான மக்களின் பங்கேற்புடனும், சர்வதேச அமைப்புகளின் – சர்வதேச ஊடகங்களின் நேரடி கண்காணிப்பின் கீழும் இவ்வருட நினைவேந்தல் உணர்வுபூர்வமாக மேற்கொள்ளப்பட்டது. நினைவேந்தலை வெறும் அழுது, ஆறுவதற்கான சம்பிரதாய நிகழ்வாக அல்லாமல், இங்கு இடம்பெற்றது இனப்படுகொலையே என்பதையும், அதனை அடுத்தடுத்த சந்ததியினரும் நினைவுகொள்ளவேண்டும் என்பதையும் பங்கேற்பாளர்கள் உணர்த்தியிருந்தார்கள். இன்னொருவிதத்தில் சொல்வதானால், முள்ளிவாய்க்கால் மண்ணும், அது தகிப்போடு வைத்திருக்கும் நினைவுகளும் அழுதரற்றுவதற்கானவை அல்ல, தமிழ் தேசிய எழுச்சிக்கானவை என்பதை வெளிப்படுத்தின.



இவ்வாறானதொரு கற்பித்தலை செய்திருக்கும் நினைவேந்தலைக் குழப்புவதற்கு இலங்கை அரசு பல வேலைகளை முன்னெடுத்தது. அதில் முதன்மையானது, நினைவேந்தல் விடயத்தில் வடக்கு, கிழக்கு எனத் தனித்தனியாகக் கையாண்டமை. கிழக்கில் குவிக்கப்பட்டிருக்கும் முஸ்லிம் பொலிஸார், இராணுவ புலனாய் வாளர்கள், தமிழ் ஒட்டுக்குழுக்களின் உறுப்பினர்கள் இந்தப் பணிக்காக அமர்த்தப்பட்டிருந்தனர். அவர்களும் மிகுந்த விசுவாசத்தோடு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தொடர்பான அனைத்து நிகழ்வுகளையும் கிழக்கில் கட்டுப்படுத்திக்கொடுத்தனர். முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சியவர்களை, ஐ.சி.சி.பி.ஆர் சட்டத்தின் கீழ் கைதுசெய்தனர். நினைவேந்துவோரை களத்தில் இறங்கி அச்சுறுத்தினர். கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் ஒழுங்குசெய்த நினைவேந்தல் நிகழ்வைக் காலால் தட்டிவிட்டுக் குழப்பியடித்தனர். ஆனால் வடக்கில் இந்த அடக்குமுறையை மேற்கொள்ளவில்லை. பல இடங்களில் இராணுவமும், இராணுவப் புலனாய்வாளர்களும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வாங்கிப் பருகினர். இறுதி நாள் நினைவேந்தலில் கூட வடக்கு, உள்ளிட்ட முள்ளிவாய்க்கால் பகுதிகளில் சீருடையணிந்த பொலிஸாரையோ, இராணுவத்தினரையோ காணமுடியவில்லை. எனவே முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை கிழக்குப் பக்கமாகவோ, இலங்கைத் தீவுக்குள் வடக்குத் தவிர்த்து தமிழர்கள் வாழும் ஏனைய பிராந்தியக்களுக்குள்ளே பரவவிடாது தடுத்துவிட்டனர். நினைவேந்தல் விடயத்தில் வடக்கை தனியாகவும், கிழக்கை தனியாகவும் கையாளத் தொடங்கியிருக்கின்றனர். இனிவரும் காலங்களில் ஒருதேசமாகத் தமிழர்கள் நினைவேந்தும் அனைத்து நிகழ்வுகளுக்கும் இதனைப் பிரயோகிக்கக்கூடும்.



இம்முறை இடம்பெற்ற நினைவேந்தல் நிகழ்வுகளில் அம்னெஸ்டி இன்டர்நெஷனல் அமைப்பின் செயலாளர் நாயகம் கலந்துகொண்டார். நினைவேந்தல் நிகழ்வுக்கு முதல்நாள் மாலையே முல்லைத்தீவிற்கு வருகைதந்திருந்த அம்மணி, காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள், ஊடகவியலாளர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகளைச் சந்தித்தார். "சிறீலங்காவில் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்து 15 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. இப்போது என்ன உணர்கிறீர்கள்" என்றவகையறாக் கேள்விகளை சந்தித்த அனைவரிடமும் கேட்டுக்கொண்டார். மறுநாள் அதாவது நினைவேந்தல் அன்று, வட்டுவாகல் பாலத்தில் இறங்கி நடந்தார். நினைவேந்தல் மையத்திற்கு வருகைதந்து, இனப்படுகொலையானவர்களுக்கு மலர் வணக்கம் செலுத்தினார். அவரைக் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள், தம் சகோதரியைப் போல அழைத்துவந்தனர். ஊடகங்கள், காணா மலாக்கப்பட்டவர்களின் உறவுகள் அம்மணியைக் கட்டியணைத்து அழுவார்கள், தம் வலியைச் சொல்வார்கள், அந்நேரம் ஏதாவது ஒளிப்படங்கள் எடுக்கலாம் எனக் காத்திருந்தன. ஆனால் அவ்வாறான எவ்வித "அசம்பாவிதங்களும்" ஏற்படாத படிக்கு, 17ஆம் திகதி காலையே முல்லைத்தீவுக்கு வருகைதந்துவிட்ட தொண்டு நிறுவனங்களின் பணியாளர்கள் "கவனித்துக்கொண்டார்கள்". அம் மணியின் வருகையை அமைதியாக வழிநடத்தினர்.



நினைவேந்தல் மையத்திற்கு வெளியே வந்த அம்மணி, ஊடகங்களின் கேள்விகளுக்குப் பதிலளித்தார். எந்தப் பதிலிலும் இனப்படுகொலை என்ற வார்த்தை இடம்பெறவில்லை. தப்பித்தவறி கூட அந்த வார்த்தை வந்துவிடக்கூடாது என்பதில் கவனமாயிருந்தார். அவ்விடத்தில் அவர் அளித்த பதில்கள் மிக நுணுக்கமானவை.

இம்முறை நினைவேந்தலில், ஏ.பி, ஏ.எவ்.பி, கெட்டிஇமேஜஸ் உள்ளிட்ட பல சர்வதேச ஊடகங்கள் கலந்துகொண்டிருந்தன. முள்ளிவாய்க்காலில் சிதறிக் கிடக்கும் போரின் எச்சங்கள் தொடக்கம், இடிந்து கிடக்கு கட்டடங்கள் வரையில் அனைத்தையும் ஒளிப்படம் எடுத்தன. நினைவேந்தலில் கலந்துகொண்ட மக்கள் வடித்த ஒவ்வொரு கண்ணீர்த்துளியையும் ஒளிப்படம் எடுத்துக்கொண்டன. எவ்விடத்திலும், எந்தக் கெமராவும், தமிழினப்படுகொலை என்ற பாதகையைக்கூட ஒளிப்படமெடுக்கவில்லை. தமது ஊடகச் செய்தி அறிக்கைகளில் அந்த வார்த்தையையோ, அந்த வார்த்தையை வெளிப்படுத்தும் ஒளிப்படங்களையோ வெளியிடவில்லை. "தமது ஊடகம் அந்த வார்த்தையைப் பயன் படுத்துவதில்லை" என வெளிப்படையாகவே சொன்னார் ஒரு வெள்ளைக்கார ஊடகர். இதன் காரணத்தினாலேயே முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலை நினைவேந்தலில் வாசிக்கப்பட்ட அறிக்கையை எந்த சர்வதேச ஊடகங்களும் வெளியிடவுமில்லை.



இம்முறை நினைவேந்தல் ஏற்பாடுகளில் மதம் சார்ந்த சில சலசலப்புகள் ஆங்காங்கே ஏற்பட்டன. அதனை ஆரம்பத்திலேயே கிள்ளியெறியாவிட்டால், எதிர்காலத்தில் மிகுந்த பாதிப்பினை அது ஏற்படுத்தும். நினைவேந்தலுக்கு மூன்று நாட்கள் மீதமாக இருக்கும்போது, நினைவேந்தல் நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தாது, அதனை ஒரு சமூக இயக்கமாக மாற்றுவதற்கு நினைவேந்தல் ஒருங்கிணைப்புக்குழு தயாராகவேண்டும். அப்போதுதான் இதுபோன்ற மதவாத சக்திகள் நினைவேந்தல் நிகழ்வொழுங்குகளுக்குள் தலையிடுவதைத் தடுக்க முடியும்.



இம்முறை நினைவேந்தலில் அவதானிக்கப்பட்ட மிகமுக்கியமான விடயங்களில் ஒன்று, நினைவேந்தல் இடம்பெறும் காணிசம்பந்தமானது. தற்போது முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் இடம்பெறும் வளாகமானது, அரசுக்கு சொந்தமானது. அந்தக் காணியைக் கரைச்சி பிரதேச சபையின் கீழ் கொண்டுவந்து, நினைவேந்தல் மையமாகப் பிரகடனம் செய்வதற்கான பணிகள், வட மாகாண சபை இயங்கும் காலத்தில் முன்னெடுக்கப்பட்டது. அந்த வேலைத்திட்டத்தில் தமிழ் தேசிய அரசியல்வாதிகளும், நினைவேந்தல் ஒருங்கிணைப்புக்குழுவும் அதிக கவனமெடுக்காமை காரணமாக, எவ்வித முன்னேற்றமும் இடம்பெறவில்லை. தற்போது, பிரதேச சபைகள் செயலற்றிருக்கின்ற நிலையில், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் மையம் நிலஅளவைத் திணைக்களத்தின் அளவீடு செய்யப் பட்டிருக்கின்றது. எந்த அரசியல் கட்சிகளும் இந்த விடயத்தில் கவனம் எடுக்கவில்லை. தமது எதிர்ப்பை வெளியிடவில்லை. எனவே குறித்த நினைவேந்தல் மையத்தினை அரசு தன் நிலம் என வர்த்தமானி அறிவிப்புச் செய்து, அபகரித்துக் கொள்ள அதிக வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

முள்ளிவாய்க்காலில் தமிழின அழிப்பின் குறியீடாக இன்றும்எஞ்சியிருப்பது முள்ளிவாய்க்கால் பொதுச்சந்தைக் கட்டடம் மாத்திரமே.

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# இழுபறி நிலையில் சம்பள விவகாரம்

துரைசாமி நடராஜா

இலங்கையின் பெருந்தோட்ட தொழிலாளர் சம்பள விவகாரம் தொடர்ந்தும் இழுபறி நிலையில் இருந்து வருகின்றது. முதலாளிமார் சம்மேளனத்தின் விடாப்பிடியான போக்குகள் நிலைமையை மேலும் இறுக்கமடையச் செய்துள்ளன. இதனிடையே பெருந்தோட்டத் தொழிலாளர் சம்பள விடயத்தை தொடர்ந்தும் இழுத்தடித்து அவர்களை ஏமாற்றத்துக்கு உள்ளாக்காமல், சிறுதோட்ட உரிமையாளர்களாக அவர்களை மாற்றியமைத்து ஒளிமயமான எதிர் காலத்திற்கு வித்திடவேண்டுமென்று வலியுறுத் தல்கள் இடம்பெற்று வருகின்றன.



பெருந்தோட்ட தொழிலாளர்கள் இந்நாட்டில் குடியேறிய காலம் தொட்டு பல்வேறு இன்னல்களுக்கும் சவால்களுக்கும் முகம் கொடுத்து வருகின்றமை தெரிந்த விடயமாகும். அடிப்படை வசதிகள் கூட இல்லாத நிலையில் இம்மக்களின் வாழ்க்கைப் போக்குகள் அமைந்து விளங்குகின்றமை குறித்து பலரும் தமது விசனப்பார்வையினை செலுத்தி வருகின்றனர். இம்மக்களின் வாழ்க்கைத்தர மேம்பாட்டிற்கு இடையூறாக விளங்கும் காரணிகள் பலவற்றுள் உழைப்புக்கேற்ற ஊதியமின்மை பிரதான மானதாக விளங்குகின்றது. இது இம்மக்களின் சகலதுறை பின்னடைவுக்கும் வலுசேர்த்து வருகின்றது.

பெருந்தோட்ட தொழிலாளர்களின்சம்பள நிலைமைகள் ஆரம்பகாலம் தொட்டே திருப்தி கரமானதாக காணப்படவில்லை. இம்மக்களை கசக்கிப் பிழிந்து இவர்களின் உச்சகட்ட உழைப்பை உறிஞ்சுவதில் கவனம் செலுத்திய நிர்வாகத்தினர் இவர்களுக்கு நியாயமான ஊதியத்தைப் பெற்றுக் கொடுக்கவோ அல்லது இவர்களின் இன்னோரன்ன தேவைகளையும் பூர்த்தி செய்யவோ எவ்வித அக்கறையையும் செலுத்தவில்லை என்பதே உண்மையாகும். 1944 க்கு முன்னர் ஆண் தொழிலாளியொருவருக்கு நாட்சம்பளமாக 41 சதமும், பெண் தொழிலாளியொருவருக்கு 37 சதமும், சிறுவர்களுக்கு 25 சதமும் வழங்கப்பட்டது.



1947 இல் இது ரூபா 1.72, ரூபா 1.38, ரூபா 1.12 என்றவாறு அமைந்திருந்தது. 1967 இல் ஆண்களுக்கு ரூபா 3.01, பெண்களுக்கு ரூபா 2.45, சிறுவர்களுக்கு ரூபா 2.13 ஆகவிருந்தது. பத்து வருடங்களின் பின்னர் அதாவது 1977 இல் ஆண்கள்ரூபா4.56, பெண்கள்ரூபா3.70, சிறுவர்கள் ரூபா 3.23 இனைப் பெற்றுக் கொண்டார்கள். ஆண், பெண் தொழிலாளர்களுக்கு சமசம்பளம் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட காலமாக மேலெழுந்த நிலையில் அதுவும் பின்னாளில் சாத்தியமானது. 1984 இல் ஆண், பெண் தொழிலாளர்களின் வேதனங்கள் சமப்படுத்தப்பட்டமை இம்மக்களின் வேதன வரலாற்றில் ஒரு திருப்புமுனையாகும்.

### குறைந்தபட்ச வேதனச் சட்டம்

1927 இல் கொண்டுவரப்பட்ட 27 ம் இலக்க இந்தியத் தொழிலாளர் குறைந்தபட்ச வேதனச் சட்டமே (The Indian Estate Workers 'Minimum wages Law Of 1927) இலங்கையில் இந்தியத் தொழிலாளர்களின் வேதனங்களை நிர்ணயிப்பதற்கு கொண்டு வரப்பட்ட முதலாவது சட்டமாகும். உடல் உரம் வாய்ந்த இந்தியத் தொழிலாளர்களின் வேதனங்களை நிர்ணயிப்பதற்கு தோட்ட வேதனசபைகள் நியமிக்கப்பட வேண்டுமென இச்சட்டம் விதித்தது. சர்வதேச தொழில் ஸ்தாபனம் கூட இதற்குப்பின்னரே அதாவது1928ம்ஆண்டிலேயே குறைந்தபட்ச வேதனமட்ட நிர்ணயம் பற்றிய விதியினை அறிமுகம் செய்ததால் மேற்படிச் சட்டம் முக்கியத்துவம் மிக்கதாக விளங்குவதாக புத்திஜீவிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

1927 ம் ஆண்டின் குறைந்தபட்ச வேதனச் சட்டம் தோட்டத் தொழிலாளர்களின் வேதனம் குறித்து முக்கிய விதிகள் சிலவற்றைக் கொண்டிருந் தது. தோட்ட வேதன சபைகளைத் தாபித்தல், குறைந்தபட்ச வேதனங்களை நிர்ணயித்தல், நாளொன்றுக்கு ஒன்பது மணி நேரத்திற்கு மேற்பட்ட வேலைக்கு (மதிய உணவுக்கான ஒரு மணி நேரத்தையும் இது உள்ளடக்கும்) மேலதிகக் கொடுப்பனவுகளை செலுத்துதல், பத்து வயதுக்குக் குறைந்த பிள்ளைகளை வேலைக்கு அமர்த்துவதை தடை செய்தல் போன்ற விதிகளை இச்சட்டம் கொண்டிருந்தது.



அத்தோடு குறைந்தபட்ச நாளாந்த வேதனங்கள், சட்டப்படி வரையறுக்கப்பட்ட நியமமான வேலைநாள், வேலைக்கு சேர்த்துக் கொள்வதற்கான ஆகக்குறைந்த வயது, வேதனங்களை நிர்ணயிப்பதில் தொழில் வழங்குநர், தொழிலாளர், அரசாங்கம் என்ற மூன்று தரப்பினரும் பங்குபற்றல் போன்ற விதிகளையும் கொண்டிருந்ததோடு, மாதாந்த வேதனங்கள் தொடர்ந்து வரும் மாதத்தின் 10 ம் திகதிக்கு முன்னர் செலுத்தப்பட வேண்டும் என்ற விதியையும் 1927 ம் ஆண்டின் குறைந்தபட்ச வேதனச் சட்டம் கொண்டிருந்தது.

இதேவேளை 1941 இல் வேதனசபைச் சட்டம் (The Wages Board Ordinance No.27 Of 1941) முன்வைக்கப்பட்டது. இச்சட்டமானது முன்னைய சட்டத்திலும் பார்க்க பூரணத்துவம் மிக்கதாக காணப்பட்டது. முன்னைய சட்டத்தில் காணப்பட்ட அடிப்படை விதிகளை இது அங்கீகரித்ததோடு, மேற்படி விதிகளை திட்டவட்டமாகவும் தெளிவாகவும் வரையறுப்பதன் மூலம் அவற்றை பயனுறுதி வாய்ந்த முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு வழிசெய்தது. இச்சட்டத்தின்படி வேதனங்களும் அவற்றோடு தொடர்புடைய வேறு விடயங்களும் வேதன சபைகளின் பொறுப்பின்கீழ் கொண்டு வரப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும். 1971 இல் குறைந்தபட்ச வேதனவிதி அறிமுகப்படுத்தப்பட்ட நிலையில் தொழிலாளர்களின் வேதன வரலாற்றில் முக்கிய அபிவிருத்தியாக இது அமைந்தது. இச்சட்டமானது சமமற்றதும், ஒப்பந்தத்திற்கு உட்படாததுமான வருமானம் குறித்த பிரச்சினைகளை தீர்த்து வைக்க முயன்றதாக தெரிவிக்கப்படுகின்றது.



பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட உணவு மானியங்களின் வரிசையில் 1979 க்கு முன்னரான உணவு மானியங்கள் முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன. 1979 இல் இலங்கையில் ' உணவு முத்திரை ' என்னும் வறுமை நிவாரண முறை அரசாங்கத்தால் நடைமுறைபடுத்தப்பட்டது. 1965 ம் ஆண்டு வரை அரசாங்கம், தொழிலாளர்களுக்கு அரிசி மானியத்தை வழங்கியது. அதில் அரிசியின் உண்மை விலையில் ஒரு பகுதியினை அரசாங்கம் செலுத்தியது. அந்தச் சகாய விலையினால் தொழிலாளர் ஒருவருக்கு 1960 ம் ஆண்டில் ரூபா 61.36 உம், 1965 ம் ஆண்டில் ரூபா 65.52 உம் இலாபமாகக் கிடைத்தது. 1967 ம் ஆண்டு முதல் இலவச அரிசி வழங்கப்பட்டது. 1970 முதல் 1978 ம் ஆண்டு வரை அரிசி இலவசமாகவும், மானிய விலையிலும் வழங்கப்பட்டது. பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வேதனங்கள் தொடர்ச்சியாகவே உழைப்பிற்கேற்ற ஊதியமாக இல்லாத நிலையில் இதனை ஈடு செய்வதற்கு அரிசி மானியமாக வழங்கப்பட்டதாக சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

### சம்பள நிர்ணய சபை

இதனடிப்படையில் 'தொழிலாளர்களின் பிரதான உணவுப் பண்டமான அரிசியை அதனின் சந்தைவிலையில் ஏற்படும் தளம்பல்களை கவனத்தில் கொள்ளாது நிலையான விலையில் விநியோகிப்பதன் மூலம் வாழ்க்கை செலவில் ஏற்படும் மாற்றங்களுக்கேற்ப வேதனங்களை மாற்றியமைக்கப்பட வேண்டிய தேவை

தொடர்ச்சி 15 ஆம் பக்கம்

## இளையோரே சிகரம் நீங்கள்

# அழிந்துகொண்டிருக்கும் அகிலத்தை அழியாமல் காக்க இணைந்து செயற்படுவோம்

கவிதா ஆல்பர்ட்

உலகத்தை நாம் எண்ணற்ற சவால்களுக்குள் சிறைப்பிடித்துக் கொண்டுவிடுகிறோம். ஆயுதக்குவியல்களும், அடுக்குமாடிகளும், இயற்கையைக் கொன்றழித்து, அகிலத்தை அழிவின் விளிம்புக்குக் கொண்டுசென்றுகொண்டிருக்கிறது. நம் கண்முன்னே விவசாய நிலங்கள் அழிந்து கொண்டிருக்கின்றன. நாமோ செறிவூட்டப்பட்ட செயற்கை உணவுகளின்பால் நாட்டம் கொண்டவர்களாக மாறிவிடுகிறோம்.



கற்றுக்கொடுக்கும் ஆசான்களும், இன்று கட்டுப்பாடுகளை இழப்பதால், கல்வியின் தரம் தாழ்ந்துகொண்டிருக்கிறது. ஒழுக்கத்தையும், உயரிய பண்பாடுகளையும் கற்றுத்தந்த கல்வி நிலையங்கள் இன்று வியாபார மையங்களாக மாறி வருவதால், அடிப்படையிலேயே அறம் தோற்றுவிடுகிறது. மனித நேயத்தைப் பயிரிடும் மாணவப் பருவம், திகிலை ஏற்படுத்தும் போர்க்களங்களாக மாறிவருவது பரிதாபத்துக்குரியது.

ஒரு காலகட்டத்தில் இளையோர் குழுக்கள் என்பது, அனைத்து நீதிகளுக்குமான ஒரு கட்டமைப்பாக இருந்து வந்ததில், நானும் பங்கெடுத்து, பல நல்ல காரியங்களை அரங்கேற்றியுள்ளேன். அன்று என்னில் தூவப்பட்ட மனிதநேய விதைதான், பூமிக்கும் மனித குலத்துக்கும் என்னாலான சில நல்லவற்றை உருவாக்க வழி சமைத்துத் தந்துகொண்டிருக்கிறது.

இளையோராகிய நீங்களும், இம்மனித குலத்துக்கு நன்மை செய்யும் நாயகர்களாக உலா வரவேண்டும் என்பதே என் உள்ளத்து ஆவல். நான், எனது என்கிற எண்ணமும், நிலையும் மாறவேண்டும். நாம், நமது என்கிற பரந்த பார்வை, நம் உள்ளத்தில் தோன்ற வேண்டும். உங்களைப் படைத்த கடவுளுக்கு நீங்கள் நன்றியுள்ளவர்களாக இருந்தால், அவர் படைத்தவருக்கும் நன்றியுள்ளவர்களாக இருப்பீர்கள்.

கடல் கோபத்தில் கொந்தளித்தாலும், மீண்டும் அமைதியாகி, மீண்டும் உங்களை மறுகரைக்குக் கொண்டுசேர்க்கிறது. வெட்ட வெட்ட மரங்கள் மீண்டும் தளிர்த்துப் பூத்துக்காய்த்து, உங்களுக்குப் பலன் கொடுக்கின்றன. இப்படி இயற்கைக்கு நீங்கள் இடர்செய்த போதிலும், அது இயன்றவரை உங்களுக்கு நன்மை செய்து கொண்டே இருக்கின்றது.





ஆனால், நாம் தான் தன் தலையைத் தாழ்ச்சியோடு குனிந்து நமக்குக் காட்டுகிறது இந்தப் பூமி என்பதற்காக அதன் தலையில் அடுக்குமாடிகள் என்ற பெயரில், அடுக்கடுக்கான சுமைகளை ஏற்றுகிறோம். உலகிலுள்ள நகரங்களை நோக்கி, நாம் படையெடுப்பதால், நகரங்கள் நரகங்களாக மாறிவருகின்றன.

சீனா போன்ற சில நாடுகளின் நகரங்கள் படிப்படியாகப் பூமியில் இறங்கத்தொடங்கி விட்டன என்று அறிவியல் ஆய்வாளர் கூறுகின்றனர். நாம் இயற்கைப் பேரிடர்களால் இடர்ப்படும் வேளையில், உலகம் முழுவதும் பூமி வெப்பமயமாகி வருவதன் காரணமாக, இன்று வெப்ப அலைகள் வீசத் தொடங்கி, பல்வேறு வகையான நோய்களைத் தோற்றுவித்து விடுகின்றன. நாம் அனைத்தையும் செய்தியாகப் பார்த்துவிட்டு, கடந்து செல்கின்றோமே தவிர, இந்த எச்சரிக்கை அதிர்வுகளைக் கருத்திற்கொண்டு, நாளை இந்த உலகையும், நமது சந்ததியினரையும் காப்பாற்ற வேண்டிய கடமையும் பொறுப்பும் நமக்கு இருக்கிறது என்பதை நாம் உணரத் தலைப்படுவதில்லை.



நெருப்பை அணைக்க நீரைப் பயன்படுத்துவது இயற்கையான நடைமுறை. ஆனால் இன்று நமது மனங்கள்நாம் மட்டும்தப்பித்துக்கொண்டால் போதும் என்றெண்ணித் தப்பியோடும் தனித்துவத்தில் முன்னேறிவருகிறது. ரஷ்யா போரால் நெருக்கடி நிலைக்கு உள்ளானபோது, விவசாய உற்பத்தியை அதிகரித்து, ஏற்றுமதியை அதிகரிக்கச் செய்து, நெருக்கடி நிலைமையிலிருந்து மீண்டு வந்ததுடன், இன்று விவசாயக் கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதாக நாம் செய்திகள் மூலமாக அறிகிறோம்.

நாம் இன்று அடிமரம் வெட்டப்படுவதை அறியாமல் மேல் கிளையில் ஏறி அமர்ந்து கொண்டு, தப்பித்துக்கொண்டதாக எண்ணி, இறுமாப்பு அடைகிறோம். வெப்பமயமாகி வரும் பூமியைப் பாதுகாக்க வேண்டுமானால், மரங்கள் ஏராளமாக நடப்படவேண்டும். அழிக்கப்பட்டுவரும் நீர் நிலைகளை மீட்க வேண்டும். நகரங்களின் நெருக்கடிகளைக் குறைத்து, கிராமங்களின் வளர்ச்சியை ஊக்குவிக்க வேண்டும்.

அடிப்படையில் மனிதனுக்குத் தேவை நிலம், நீர், காற்று, இம்மூன்றும் தான். இன்று பல நாடுகளில் உள்ள காற்று மாசடைய ஆரம்பித்துவிட்டது. நிலம் மலட்டுத்தன்மை அடைந்துவருவதுடன், சோலைவனங்கள் பாலை வனங்களாக மாற்றப்பட்டுக்கொண்டிருக் கின் றன. எந்த உணவை எடுத்தாலும், கலப்படம் என்கிற நிலை. மருந்துப் பொருட்களில் கூட உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் நஞ்சுகள் கலக்கப் பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. இத்தனை சீரழிவுகள் அரங்கேறுவதற்கு காரணம் இளையோரின் பொறுப்பற்ற செயற்பாடுகள் என்பதை நாம் உணரலாம்.



வெப்பமயமாகிவரும் பூமியைக் காப்பாற்றும் வழிமுறைகளை, கண்டறியவும், சீர்செய்யவும் அவர்கள் எண்ணுவதில்லை. மாறாக அவர்கள் உல்லாசமாகச் சம்பாதிக்கும் உயர்தரக் கல்வியைக் கற்பதிலும், கைநிறையப் பணம் சம்பாதித்து, அழகான ஒரு நாட்டில் ஆடம்பரமாக வாழவேண்டும் என்றும் கருதுகின்றனர்.

படித்த, பக்குவமுள்ள இளையோர், பொறுப்பற்ற முறையில் இன்று பிளாஸ்டிக் கழிவுகளை கண்ட இடத்தில் வீசுவதையும், உயர்தரமான வாகனங்களில் உல்லாசமாகப் பயணிப்பதையும், ஆடம்பரமான மாளிகைகளை அமைத்து, அதில் சுகபோகமாக வாழ்வதையும் விரும்புகின்றனர்.

வாகனங்களின் பயன்பாடு பெருகுவதால், அதிலிருந்து வெளியேறும் வெப்ப அலைகளைப் பற்றி அவர்களுக்குக் கவலை இல்லை. குளிர்சாதனங்களும், அறைகளிலிருந்து வெளியேற்றப்படும் கரியமில வாயு மற்றும் தொழிற்சாலைகள் வெளியேற்றும் சுகாதார சீர்கேடுகளைப் பற்றியெல்லாம் அக்கறைகொள்ள ஒரு சில சமூக ஆர்வலர்கள் மட்டுமேயுள்ளனர்.

இந்நிலை தொடர்ந்தால், உலகம் வெகு விரைவில் பேரழிவை எதிர்கொள்ள இருக்கிறது என்பதை நாம் இயற்கையின் மாற்றங்கள் வழியாக உணர்ந்து செயற்பட வேண்டும். இளையோர் அனைவரும் இணைந்து, பரந்த பார்வையோடு உலகைக் காப்பாற்ற, ஒன்றிணைந்து, பல திட்டங்களைத் தீட்டிச் செயற்பட்டால் அகிலத்தை அழியாமல் காக்கலாம்.

**தொடரும்.**

# இங்கிலாந்தின் South End On Sea என்ற கடலோர நகரத்தில் வாழும் தமிழர்களால் நினைவுகூரப்பட்ட

## மே18 தமிழின அழிப்பு நினைவு நாள்




15 வருடங்களுக்கு முன்னர் முள்ளிவாய்க்கால் இன அழிப்பில் உயிரிழந்த தமது அன்புக்குரியவர்களை நினைவு கூருவதற்காக இங்கிலாந்தின் *Southend-on-Sea* என்ற கடலோர நகரத்தைச்சுற்றி வாழும் சுமார் முந்நூறு தமிழர்கள் நேற்று (மே 17) அந்தி வேளையில் கடற்கரையில் வணக்க நிகழ்வொன்றை நடத்தினர்.



ஆண்டுதோறும் மே 18ஆம் தேதி தமிழர் இனப்படுகொலை நினைவு தினத்தை முன்னிட்டு பிரித்தானியாவில் நடந்த பல நிகழ்வுகளில் இதுவும் ஒன்றாகும்.

*Shoebury East* கடற்கரையின் வழக்கமான இரைச்சல் மற்றும் குதூகலச் சூழ்நிலையானது அமைதியான பிரதிபலிப்பு, மலர் அஞ்சலிகள், நினைவு உரைகள் மற்றும் கவிதைகளாக மாற்றப் பட்டு, நூற்றுக்கணக்கான மிதக்கும் நினைவு விளக்குகள் அலைகளில் மிதக்க விடப்பட்டது.

அதைத் தொடர்ந்து முள்ளி வாய்க்கால் கஞ்சி பங்கேற் பாளர்கள் மற்றும் சுற்று வட்டாரத்தில் உள்ள உள்ளூர் மக்களுக்கும் வழங்கப்பட்டது. தமிழர் தாயகத்தில் அதே தீங்கற்ற செயல்பாடு சிறிலங்கா அரசால் தடை உத்தரவுகள், கைதுகள் மற்றும் மிரட்டல் களுடன் சந்தித்தது குறிப் பிடத்தக்கது.

*Southend-on-Sea* நிகழ்வில் பங்கேற்றவர்க ளில் பலர் இன அழிப் பில் இருந்து தப்பியவர் கள். அவர்களில் ஒருவரான திருமதி நிஷாந்தினி சந்திர தாசன் கூறுகையில், பதி னைந்து ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ் இனப் படுகொலை நடந்த இட மும் முள்ளிவாய்க்கால் கடற்கரையாக இருந்த தைக் கருத்தில் கொண்டு, இந்த நிகழ்வுக்கு ஒரு கடற்கரையில் அமைந்தது பொருத்தமானது என் றார். நிகழ்வின் மிகவும் உணர்ச்சிகரமான தருணத் திற்கு முன் அவர் நினைவுச் சுடரை ஏற்றி வைத்தார்.



அதன் பின் அங்கு கூடியிருந்த அனைவராலும் நினைவு விளக்குகளும், மலர்களும் கடலில் காணிக்கையாக விடப்பட்டன. ஒளிரும்



விளக்குகள் படுகொலை செய்யப்பட்ட எமது உறவுகளின் நினைவு சுமந்து ஆழ்கடல் நோக்கி மிதந்து சென்றன.



மே 12 முதல் 18 வரை நடைபெறும் தமிழ் இனப்படுகொலை நினைவேந்தல் வாரத்தின் போது இந்த வகையான நினைவுச்சின்னங்கள் பரவலாகி, அனைத்து நாடுகளிலும் உள்ள பல கடற்கரைகளிலும் இவ்வாறான நிகழ்வுகள்



நடைபெற வேண்டும் என்பதே அவர்களின் விருப்பம் என்று நிகழ்வின் ஏற்பாட்டாளர் ஒருவர் தெரிவித்தார். மேலும் முள்ளிவாய்க்கால் கஞ்சியை எமது மக்கள் அனுபவிக்கும் அவலங்களின் அடையாளமாக வருங்கால சந்ததியினர் மறந்துவிடக்கூடாது என அவர் தெரிவித்துள்ளார்.

• • •

# ஒற்றை நட்சத்திரத்தின் உலா ஈழக்கூத்தன் ஏசி தாசீசியஸ்





ஈழத்து நாடகக் கலைஞனின் ஆவணத் திரைப்படம் முதன் முதலில் லண்டன் மாநகரில் திரையேற்றம் கண்டது. 'ஈழக்கூத்தன் ஏசி தாசீசியஸ்' ஆவணத்திரைப்பட வெளியீடும் - திரையிடலும் 11 மே 2024 சனி பிற்பகல் 3 பிற்பகல் அல்பேட்டன் பாடசாலை (Alperton Community School) மண்டபத்தில் நிகழ்ந்து, நிறைவுற்றது. நாம் வாழும் காலத்து தனிப்பெரும் ஆளுமை ஏசி தாசீசியஸ் அவர்களின் நெடுங்கலை பயணத்தின் நாடக பதிவுகள் திரையேற்றம் கண்டன. ஈழம், தமிழ்நாடு, புலம்பெயர்ந்த நாடுகள் என அவர் பயணித்த பயணத்தின் தொகுப்பு மிகவும் சிறப்பாக திரைக்குள் கொண்டுவரப்பட்டிருந்தன. குறிப்பாக மேலை நாட்டவருடன் இணைந்த தொழில்முறை நாடகச் செயற்பாடுகளும் அவர்களின் அனுபவப் பகிர்வும் தமிழ் நாடக வரலாற்றிற்கு பதிய வருகையாக இருந்தது. சுவிஸ் தமிழ் நாடகக் கல்லூரியின் தயாரிப்பிலும், ஆவணத் திரைப் படத்துக்கான இந்திய தேசிய விருது பெற்ற அம்ஷன் குமாரின் இயக்கத்திலும் ஆவணத் திரைப்படம் கரு, உருக் கொண்டு அல்பேட்டன் பாடசாலை மண்டபத்தில் LED திரையில் இரண்டாம் பிரசவம் கண்டது. இந்த திரைப்படம் சுவிற்சலாந்தின் தலைநகர் பேர்னில் CineABC திரையரங்கில் 05.05.2024 காலை 10:30 மணிக்கு முதல் பிரசவம் கண்டது.







லண்டன் திரையிடலின் சிறப்பு விருந்தினர் களாக நாடகமும் அரங்கக் கலைகளும்- துறை, தலைவர், யாழ்ப்பாணம், பல்கலைக்கழகம், கலாநிதி நவதர்ஷனி கருணாகரன் அவர்களும்,





சிங்கப்பூர் கலாச்சார அமைச்சின் முன்னாள் செயல் அதிகாரி நாடகர் இளங்கோவன் அவர்களும் சிறப்புரையாற்றி சிறப்பித்திருந்தார்கள். அன்றைய நாள் நிகழ்ச்சியை எஸ்கே இராஜன் அவர்கள் சிறப்புற அறிவித்து வழிநடத்தினார். சுவிஸ் தமிழ் நாடகக் கல்லூரியின் இயக்குனர் இரமணதாஸ் அவர்கள் வந்தோரை வாழ்த்தி வரவேற்றார்.

ஏசி தாசீசியஸ் அவர்களை மூத்த நாடகக் கலைஞர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், கவிஞர் கள், அவரின் மாணவர்களான ஐபிசி, ஐஎல்சி வானொலிக் கலைஞர்கள், களரி நாடகக் குழு கலைஞர்கள் புடைசூழ்ந்து மாண்பேற்றி, வாழ்த்தி வணங்கினார்கள். பத்மநாப ஐயர், கிறிஷ;ணராஜா, பேராசிரியர் நித்தியானந்தன், பாலேந்திரா, ஆனந்தராணி, நற்குணம், கந்தையாராஜமனோகரன், சிவா சிவாப்பிள்ளை, புலவர் சிவநாதன், குகன், கோபி போன்ற இன்னும் பல கலை, இலக்கிய, சமூக ஆர்வலர்கள் ஆவணத்திரைப்பட திரையிடலுக்கு ஒன்று திரண்டது, நெஞ்சை நெகிழ வைத்து, பெருமைப்படுத்தியது. 20 வயதிலிருந்து 85 வயதிலானவர்களின் வருகை, அங்கு தமிழ்ச் சமூகத்தைப் பிரதிபலித்து நின்றது.



ஆவணத்திரைப்பட வெளியீட்டில் முதல் பிரதியை கிருஸ்ணராஜா அவர்களும், இரண்டாவது பிரதியை தனாஞானி சிங்கம் அவர்களும், மூன்றாவது பிரதியை தனம் அவர்களும் தாசீசியஸ் அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டனர். திரையிடலுக்குப் பின் இடம்பெற்ற கருத்துப் பரிமாற்றத்தில் தாசீசியஸ் அவர்களின் நாடகர், ஊடகர், ஏடகர் என்ற முப்பரிமாணத்தின் ஊடகர், ஏடகர் பரிமாணங்கள் குறைவாகப் பதிவு செய்ப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டினார்கள். அதற் காகவும் ஆவணப்படம் தயாரிக்கப்பட வேண்டும் என்ற ஆதங்கத்தையும் வெளிப்படுத்தினர்.

• • •

# பிரித்தானியாவில் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையினால் முன்னெடுக்கப்பட்ட ஓவியப்போட்டி

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் 15 ஆவது நினைவுதினத்தை முன்னிட்டு பிரித்தானியாவில் உள்ள இல்போட் பகுதியில் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை (Tamil Education Development Council) உயிர் ஓவியம் (Uyir Oviyam) என்ற சித்திரப் போட்டியை நடத்தியிருந்தது. இந்த சபையின் மாணவர்களால் நடத்தப்பட்ட இந்த நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்கள் தங்கள் திறமைகளை ஓவியங்களாக வெளிக்கொண்டுவந்திருந்தனர். தமிழ் மக்களின் அவலங்கள், அவர்கள் அனுபவித்த துன்பங்கள் மற்றும் தமிழ் மக்களின் வேணவா போன்ற ஓவியங்கள் அங்கு காட்சிப்படுத்தப்பட்டன.



அங்கு வரையப்பட்ட ஒவ்வொரு ஓவியமும், உணர்வு நிறைந்ததாகவும், தத்ரூபமாக, முள்ளிவாய்க்காலில் மரணித்த மற்றும் வேதனையை அனுபவித்த மக்களுக்கும், போராளிகளுக்கும் அஞ்சலி செலுத்துவதாகவும் இருந்தது.



தமிழீழத்தின் தேசிய மலரான கார்த்திகைப்பூ, எமது தேசியக் கொடி மற்றும் அங்கு துன்பத்தை அனுபவித்த மக்களின் அவலங்கள் என்பன ஓவியங்களாக வரையப்பட்டிருந்தது 2009 ஆண்டின் நினைவுகளை மீளக்கொண்டு வந்திருந்தது.



நிகழ்வுகள் தமிழீழத்தின் தேசியக் கொடியேற்றலுடனும், விளக்கு ஏற்றலுடனும் ஆரம்பமாகியது தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் மூத்த உறுப்பினர்கள் அதனை மேற்கொள்ள அங்கு வருகைதந்திருந்த மக்களும், மாணவர்களும் போரில் மரணித்தவர்களுக்கு தமது அஞ்சலிகளைச் செலுத்தினர்.

முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற இனப்படுகொலை தொடர்பான தகவல்கள் மற்றும் விளக்கங்கள் ஆங்கிலத்திலும், தமிழழிலும் இளையோரால் வழங்கப்பட்ட பின்னர் ஓவியப் போட்டி ஆரம்பமானது. இந்த விளக்கங்கள் இளம் ஓவியர்கள், பெற்றோர்கள் மற்றும் அங்கு வந்திருந்த பார்வையாளர்கள் ஆகியோருக்கு எமது வலிகளை உணர்த்தியிருந்தது. ஓவியப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு நடுவர்களால் பரிசில்கள் வழங்கப்பட்டன.





எமது பாரம்பரிய இசையான பறையிசை நடனம் அரங்கேற்றப்பட்டதுடன், கவிதைகள், பேச்சுகள் மற்றும் பாடல்களும் இடம்பெற்றன. எமது தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் இளைய மகன் சிறுவன் பாலச்சந்திரனின் படுகொலை மற்றும் அது தொடர்பில் கடந்த 15 வருடங்களாக அனைத்துலக சமூகம் காட்டும் மௌனம் தொடர்பில் கவிதை ஒன்று வாசிக்கப்பட்டது அங்கிருந்தவர்களை சோகத்தில் ஆழ்த்தியது.



மாணவர்களும், பிரித்தானியா வாழ் மக்களும் இணைந்து எமது வரலாறு மற்றும் தாயகம் தொடர்பில் தமது நினைவுகளை பகிர்ந்துகொண்டது புலம்பெயர் சமூகத்தின் வலிமையை உணர்த்தியிருந்தது. ஊடகத்துறை மீதான அடக்குமுறைகள் மற்றும் அங்கு மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்களுக்கு நீதி இதுவரை வழங்கப்படாமை மற்றும் பெண்கள் மீதான வன்முறைகள் போன்றவற்றை இளம் ஓவியர்கள் வரைந்தது பலரின் கவனத்தை ஈர்த்திருந்தது.

போரினால் அழிவடைந்த குடும்பங்கள் தாய்களைஇழந்தகுழந்தைகள்மற்றும்சிறுவர்கள் தொடர்பான ஓவியங்களும் பலரின் கவனத்தை ஈர்த்திருந்தது. அது இனப்படுகொலையின் வலிகளை வெளிக்கொண்டுவந்திருந்தது.




உயிரோவியம் என்ற இந்த ஓவியப் போட்டி இந்த வருடமே வெற்றிகரமாக ஆரம்பிக்கபட்டுள்ளது. அதனை அடுத்த தலைமுறையினர் தொடர்ந்து கொண்டு செல்வார்கள் என்ற நம்பிக்கை உள்ளது. எமது மக்கள் அதற்கு பெருமளவில் ஆதரவுகளை வழங்குவார்கள். தமிழ் பாடசாலைகளில் நூல்களின் மூலம் எமது வரலாறு கலாச்சாரம் மற்றும் தாயகம் போன்ற கருத்துகளைக் கொண்டுசெல்வதுடன் அதனை ஓவியங்களாக கொண்டு செல்வதிலும் எம்மைப்போன்ற அமைப்புக்கள் கவனம் செலுத்த வேண்டும்.

இளைய சமூதாயம் எமது வரலாறு மற்றும் கலாச்சாரங்களை அறிந்துகொள்வதற்கான தளத்தை நாம் உருவாக்க வேண்டும். அதற்கு நாம் அவர்களை செயற்றிட்டங்களில் உள்வாங்க வேண்டும். இந்த நிகழ்வை வெற்றிகரமாக ஒருங்கிணைத்தத்தில் பெருமையடைகின்றோம். நாம் தொடர்ந்து எமது சமூகத்துடன் இணைந்து பணியாற்றுவோம்.

• • •

## முள்ளிவாய்க் ... தொடர்ச்சி ...

இவ்வாறான கருத்துக்களைத் தெரிவிக்கின்றார்கள்.

**இவ்வாறான ஒரு பின்னணியில் பொதுத் தேர்தல்தான் முதலில் நடத்தப்பட வேண்டும் என பொதுஜன பெரமுன ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்கின்றது. இதன் மூலமாக அவர்கள் எதனைச் சாதிக்க முற்படுகின்றார்கள்?**

ஜனாதிபதியாக ரணிலோ அல்லது மற்றொருவரோ தெரிவானால், அவர்கள் முதலில் பாராளுமன்றத்தைக் கலைத்து தமக்கு ஏற்ற வகையிலான ஒரு அரசாங்கத்தை அமைப் பதற்கு முற்படுவார்கள். இது இலங்கையின் வழமையான அரசியல் கலாசாரம். அந்த வகையில் முதலில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றால், அதன்பின்னர் வரக்கூடிய பாராளுமன்றத் தேர்தலில் தமது செல்வாக்கு குறைந்துவிடும் என்ற அச்சம் உள்ளது.

ஆனால், ஜனாதிபதியும் அவரது கட்சியும் பலவீனமாக உள்ள நிலையில், முதலில் பொதுத் தேர்தல் நடைபெற்றால், பாராளுமன்றத்தில் கணிசமான ஆசனங்களைப் பெற்று அடுத்ததாக யார் ஆட்சி அமைத்தாலும், அதில் செல்வாக்கு செலுத்தலாம் என கணக்குப் பார்க்கின்றார்கள். அதனால்தான் அவர்கள் அந்தக் கோரிக்கையை வலியுறுத்துகின்றார்கள்.

ஆனால், என்னைப் பொறுத்தவரையில் 2020 பொதுத் தேர்தலில் ஐ.தே.க. முற்றாக துடைத்தெறியப்பட்டதைப் போன்ற ஒரு நிலை பொதுஜன பெரமுனைக்கு ஏற்படாது. கிராமப் பகுதிகளில் அவர்கள் விதைத்த இனவாத அரசியல் போன்றவற்றால், சுமார் 15 முதல் 20 வரையிலான ஆசனங்களைப் பெறுவார்கள் என நான் நினைக்கிறேன். அதனால், ரணில் தனக்கு சாதகமான முறையில் ஜனாதிபதித் தேர்தலுக்குச் செல்வதற்கு முன்னதாக பாராளுமன்றத் தேர்தலுக்குச் செல்வது தமக்கு சாதகமானது என பொதுஜன பெரமுன கணக்குப் பார்க்கின்றது.

ஐ.தே.க. பலவீனமாக இருப்பதால் தாம் இவ்வாறு அழுத்தம் கொடுத்து ஜனாதிபதியை இணங்கச் செய்ய முடியும் என பசில் ராஜபக்ஷ போன்றவர்கள் திட்டமிட்டார்கள். ஆனால், இது வரையில் ரணில் அதற்கு மசிந்ததாக இல்லை.

• • •

## பிரித்தானியா ... தொடர்ச்சி ...

ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

தினமும் கட்சியின் செல்வாக்கு சரிந்து வருவதால் விரைவாக தேர்தலை நடத்துவதன் மூலம் பாரிய தோல்வியை தடுக்க முடியும் என கொன்சவேட்டிவ் கட்சி தீர்மானித்துள்ளது. அதே சமயம் தற்போதைய தொழில்கட்சியின் தலைவர் கியர் ஸ்ராமர் இந்த தடவை வெற்றியீட்டலாம் என கூறப்படுகின்றது. அவரின் கட்சி கடந்த உள்ளூராட்சி தேர்தலில் அதிக இடங்களை கைப்பற்றியிருந்தது.

கருத்துக் கணிப்புக்களில் தொழில்கட்சி 45 விகித வாக்குகளையும், கொன்சவெட்டிவ் கட்சி 23 விகித வாக்குகளையும் பெறலாம் என தெரிவிக்கப்படுகின்றது. தொழில்கட்சி 14 வருடங்களின் பின்னர் ஆட்சி அமைக்கும் சாத்தியங்கள் உள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதனிடையே தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்களில் பெருமளவானோர் மீண்டும் போட்டியிட விரும்பவில்லை என தெரிவிக்கப் படுகின்றது. 129 பேரே மீண்டும் போட்டியிட விருப்பம் தெரிவித்துள்ளனர். அவர்களில் 77 பேர் ஆளும் கட்சியை சேர்ந்தவர்கள்.

## திருகோணமலை ... தொடர்ச்சி ...

பயன்படுத்தப் படும்.

அறிவு ஒளி மையத்தின் நிறுவனர் அஜித் குமார், நிர்வாகச் செயலாளர் புகழ் வேந்தன் டிலக்ஷிகா ஆகியோரால் இந்த சந்தையானது ஆரம்பித்து வைக்கப்பட்டது.

## இலங்கையில் ... தொடர்ச்சி ...

ஒஸ்மண்ட் ஜெராட் என்ற நபர் தலைமறைவாகியுள்ள நிலையி லேயே குஜராத்தின் பயங்கரவாத தடுப்பு பிரிவினர் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளனர்.

ஜெராட் தேடப்படுகின்றார் என இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளதுடன், அவரை கைது செய்ய உதவுபவர்களுக்கு சன் மானத்தை அறிவித்துள்ளது.

மே 20 திகதி குஜராத்தின் அஹமதாபாத் விமான நிலையத்தில் ஐ.எஸ் சந்தேகநபர்கள் என சந்தே கிக்கப்பட்ட இலங்கையை சேர்ந்த நால்வரை கைது செய்ததன் மூலம் குஜராத் பயங்கரவாத தடுப்பு பிரிவினர் பாரிய தாக்குதல் முயற்சியை முறியடித்துள்ளதாகத் தெரிவித்தனர்.

இது தொடர்பில் இலங்கையிலும் இந்தியாவிலும் விசாரணைகள் தீவிரமாக முன்னெடுக்கப்படுகின்றன.

## திருகோணமலை ... தொடர்ச்சி ...

அரசின் ஒரு சதித்திட்டமாகவே இதனை பார்க்கவேண்டியுள்ளது.

இன்று பல தசாப்தங்களாக மக்கள் வாழ்ந்துவருகின்ற முத்து நகர் கிராமம் போன்ற மக்களுக்கு அரசினால் ஒரு குடும்பத்துக்கு தொந்தமாக 10 பேர்ச் காணித் துண்டு வழங்க முடியாத இந்த அரசாங்கம் தற்பொழுது வெளி நாட்டவர்களுக்கு அபிவிருத்தி என்ற பெயரில் 100 ஏக்கர் காணி யினை நீண்ட கால குத்தகைக்கு வழங்க திட்டமிட்டுவருகிறது.

மக்களின் பூர்வீக காணி களை பாதுகாக்க வேண்டிய பொறுப்புடன் நான் பல்வேறு பட்ட முன்னெடுப்புகளை செய்து வருகின்றேன் அதில் ஒரு அங்கமாக புதன்கிழமை(29) திருகோணமலை மாவட்ட இலங்கை துறைமுக அதிகார சபையின் பிராந்திய முகாமையா ளர் வீரசிங்க அவர்களை நேரில் சந்தித்து முத்துநகர் நகர் மற்றும் SLPA (வராயா) குடியிருப்பு காணிகள் தொடர்பாகவும் கலந்துரையாடி னேன் என நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் குறிந்த சந்திப்பின் பின் ஊடகங்களுக்கு மேலும் தெரிவித்தார்.

## மருத்துவத்துறை ... தொடர்ச்சி ...

ளின் குடும்பங்கள் முற்றாக அழிக் கப்பட்டுள்ள நிகழ்வுகளும் கடந்த வருடம் இடம் பெற்றுள்ளது. அது காசா பகுதியில் நிகழ்ந்துள்ளது என அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## அமெரிக்க ... தொடர்ச்சி ...

ரீதியில் பல தடவைகள் தொலைபேசி உரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன. முஸ்க் அடிக்கடி றம்பின் தொலைபேசிக்கு தொடர்புகளை மேற்கொண்டு வருகின்றார். இந்த கூட்டணி அமைந்தால் குடியேற்றவாசிகள் மற்றும் அமெரிக்காவின் பொருளாதாரம் தொடர்பான கொள்கைகளில் மாற்றங்கள் ஏற்படலாம்.

றம்பிற்கு நிதி உதவிகளை அளிப்பதில் தான் பின்நிற்கப் போவதில்லை என முஸ்க் தெரிவித்து வருகின்றார். மேலும் அவர் தனது வர்த்தக தொடர்புகளையும் இந்த தேர்தலில் றம்பிற்கு ஆதரவாக பயன்படுத்த முடியும்.

அதாவது அமெரிக்காவின் 45 ஆவது அரச தலைவருக்கான தேர்தலில் றம்ப் மற்றும் முஸ்க் கூட்டணி பைடனுக்கு எதிரான பல மான கூட்டணியாக மாறுவதற்கு அதிக சந்தர்ப் பங்கள் ஏற்பட்டுள்ளதாக அதில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

நடைபெற்றுவரும் உக்ரைன் போர் மற்றும் பாலஸ்த்தீன - இஸ்ரேல் போரும் பைடனுக்கான ஆதரவுகளை அதிகளவில் குறைத்துள்ளது. அமெரிக்காவில் வாழும் முஸ்லீம் மக்களின் வாக்குகள் பைடனுக்கு எதிராகவே மாறும் என கருத்துக் கணிப்பக்கள் தெரிவிக்கின்றன.

## ஏமன் ஹதீஸ் ... தொடர்ச்சி ...

பயணித்தபோதும் யாரும் காயமடையவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

செங்கடல் மற்றும் மத்தியதரைக் கடலில் வைத்து 6 கப்பல் களைத் தாம் தாக்கியுள்ளதாக கடந்த புதன்கிழமை(29) வெளியிட்ட அறிக்கையில் ஹதீஸ் அமைப்பு தெரிவித் துள்ளது.

மத்தியதரைக்கடல் வரையில் ஹதீஸ் அமைப்பினரின் தாக்குதல் தூரவீச்சு அதிகரித்திருப்பது என்பது அவர்கள் நீண்டதூர ஏவுகணைகளை கொண்டுள்ளதை காட்டுவதாகவும், அது களமுனையில் மேலும் சிக்கல்களைத்தோற்றுவிக்கும் எனவும் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

காசா பகுதி மீது இஸ்ரேல் மேற்கொண்டு வரும் தாக்குதல்களுக்கு எதிராக கடந்த நவம்பர் மாதம் முதல் ஹதீஸ் அமைப்பினர் செங்கடலில் இஸ்ரேல் மற்றும் அதன் போருக்கு ஆதரவுகளை வழங்கும் நாடுகளின் கப்பல்களைத் தாக்கி வருகின்றனர். அமெரிக்க மற்றும் பிரித்தானிய வான்படையினர் ஹதீஸ் அமைப்பினரின் தளங்களைத் தாக்கியபோதும் ஹதீஸ் அமைப்பினர் தொடர்ந்து கப்பல்களைத் தாக்கி வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.



## தமிழர்களின்... தொடர்ச்சி ...

யாழ் நூலகத்தின் படிக்கட்டருகே அவரது சடலம் குருதியில் கிடந்தது. இக்கவிதையில் பேராசிரியர் எம்.ஏ.நுஃமான், சிவில் உடை அணிந்த அரச காவலர்கள் என்று கூறியது, குறிப்பாக பொலிஸ் அதிகாரியாக அந்தநேரம் யாழ்ப்பாணத்தில் கடமையாற்றிய ஒரு தமிழரையே குறிப்பிட்டார் என்பது பின்னர்தான் தெரியவந்தது.

இத்தகைய அறிவுலகச் சிறப்புக்கள் வாய்ந்த யாழ்ப்பாணப் பொது நூலகம் எரியூட்டலின் 20வது ஆண்டு நிறைவின்போது அதன் வரலாற்றுத் தொகுப்பை நூலகர் என். செல்வராஜர் தனது, அயோத்தி நூலக சேவைகள் நிறுவனத்தின் வெளியீடாக ஒரு ஆவணமாகப் பிரசுரித்திருக்கின்றார். 127 பக்கங் களைக்கொண்ட இந்தநூலில் யாழ்ப்பாணப் பொதுநூலகம் பற்றியும் அதன் அழிவுபற்றியும் பொதுநூலகத்தின் சேவையின் சிறப்பும் பெருமையும் பற்றியும் பல கட்டுரைகள் காணப்படுகின்றன. இத்தொகுப்பில்45 கட்டுரைகள்காணப்படுகின்றன. அவற்றிலே 14 கட்டுரை கள் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளன. எச்.ஏ.ஐ.குணத்திலக்கா, நடேசன் சத்தியேந்திரா, பேராசிரியர் நேசையா, கட்டிடக் கலைஞர் வீ.எஸ். துரைராஜா என்பவர்களின் ஆங்கிலக் கட்டுரைகள் இந்நூலுக்கு அணிசெய்கின்றன. நூலுக்கான ஆசியுரையை அப்போதைய மாநகரசபையின் ஆணையாளர் வே.பொ.பாலசிங்கம் வழங்கியுள்ளார்.

அதேபோன்று யாழ். நூலகம் எரிக்கப்பட்டபொழுது பிரதம நூலகராக இருந்த திருமதி. ரூபவதி நடராஜா அவர்கள் கடந்த 2019ஆம் ஆண்டு நூலகத்தில் தனது அனுபவங்களை வெளிப்படுத்தும் வகையில் "யாழ்ப்பாணப் பொதுநூலகம் அன்றும்,இன்றும்"என்ற மிகப் பெறு மதியான ஒரு வரலாற்றுநூலை இலண்டனில் வெளியிட்டுத் தனது ஆதங்கத்தைத் தணித்துக் கொண்டார்.

இந்த நூல்களின் படுகொலைகளை பிற்காலச் சந்ததியினருக்குத் தெரியவிடாது, மூடி மறைப்பதற்காக அந்தப் பிரமாண்டமான நூலகம் எரிக்கப்பட்டதற்கான அடையாளமே இல்லாது செய்து,அதே இடத்தி லேயே எரிக்கப் பட்ட நூலகத்தைப் பூசி மெழுகிப் எவ்வித மாற்றங்களும் செய்யாமலேயே புதிய வடிவம் கொடுத்த அரசின் தந்திரத்திற்குத் யாழ்ப்பாணத் தமிழ் அரசியல் வாதிகளும் துணைநின்றனர். அதனை ஒரு வரலாற்று நினைவுச் சின்னமாக வைத்திருக்க வேண்டியவர்களே அதனை மூடிமறைத்துள்ளமை தான் கவலையைத் தருகின்றது.

கல்வியையும் ஆவணப்படுத் துகையையும் நேசிப்பவர்களின் உள்ளத்தை ஆழமாகப் பாதித்து இந்த "நூலகப் படுகொலைகள்" இன்றும் உலகத் தமிழர்களின் நெஞ்சில் ஆறாத வடுவாக உள்ளது....... அதனை எவராலும்,எப்பொழுதும் ஈடுசெய்யப் படமுடியாத பேரிழப்பு...!இத்தகைய பண்பாட்டு,புலமைச் சொத்துக்களின் அழிப்புக்கள், தமிழர்களின் பாரம் பரியத்தை வெளிப்படுத்தும் தொல்பொருட் சின்னங்களின் அழிப்புக்கள், சிங்களவர்களே வாழாத தமிழர் தாயகத்தின் பல இடங்களில் புதிது புதிதாக முளைத்துவரும் புத்தர் சிலைகள மற்றும் மனிதப் படுகொலைகள் என இன்னும் இந்த மண்ணிலே எவ்வளவு நாட் கள் நீண்டு கொண்டு செல்லப் போகின்றது?...இதற்கு யார் முடிவு கட்டுவது...? ஆனால் என்றோ ஒரு நாள் சிங்கள பேரினவாதத்தின் அடக்குமுறைகளுக்கும், அராஜகத்திற் கும் முடிவு காணப்படும் நிலை உருவாகும்பொழுது சிங்கள இனவாதி கள் வெட்கித் தலைகுனிவர்.!.

முற்றும்

## முள்ளிவாய்க்... தொடர்ச்சி ...

பதுங்குகுழியின் எச்சங்கள், துப்பாக்கி ரவை பதிந்த சுவர்கள், போராளிகளின் ஆடைகள், பொதுமக்களின்பாவனைப்பொருட்கள்எனஅந்தச் சூழலில் இனப்படுகொலையை நினைவுபடுத்துகின்ற பல விடயங்கள் இருக்கின்றன. தமிழீழ விடுதலைப் புலிகளின் இறுதி மாவீரர் மண்டபமாகவும் அந்தச் சந்தைக் கட்டடத்தொகுதி செயற்பட்டிருக்கின்றது. எனவேதான் அதனையாவது இனப்படுகொலையின் நினைவாக அப்படியே பேணிப்பாதுகாப்பதும், ஆவணப் படுத்துவதும் அவசியமானதாகும். ஆனால் அந்தக் கட்டடத்தை இடித்துப் புதிய சந்தைத்தொகுதியொன்றை அவ்விடத்தில் அமைப்பதற்கான வேலைத்திட்டங்கள் தற்போது முன்னெடுக்கப்படுகின்றன.

முள்ளிவாய்க்கால், புதுமாத்தளன், வலையன்மடம், வட்டுவாகல் ஆகிய பகுதிகள் இறுதிப்போர் காலத்தில் முக்கியமான இடங்களாக இருந்தன. ஒவ்வொரு அங்குல நிலத்திலும், இனப்படுகொலையான தமிழர்களின் புதைகுழிகள் இருக்கின்றன. ஒவ்வொரு அங்குல நிலத்திலும் போர்க்காலத்தை நினைவுபடுத்துகின்ற பொருட்கள் சிதறிக்கிடந்தன. இறுதியாக உணவு உண்ட உணவுப் பாத்திரம் தொடக்கம், பதுங்குகுழிக்கு பயன்படுத்திய உடுபுடவைகள் வரைக்கும் அந்நிலமெங்கும் சிதறிக்கிடந்தன. ஆனால் இன்று அவை அனைத்தும் திட்டமிட்ட வகையில் அகற்றப்பட்டிருக்கின்றன. தெற்கிலிருந்து வருகை தரும் இரும்பு வியாபாரிகளுக்கு அப்பொருட்களை உள்ளூர் மக்கள் வியாபாரம் செய்துவிட்டனர். காணிகளைத் துப்பரவு செய்கிறோம் என்கிற பெயரில், அங்கு கிடந்த துணிகள் உள்ளிட்ட பொருட்களை எரித்துவிட்டனர். தன் வரலாற்றைச் சரியாகப் பேணவும், ஆவணப்படுத்தவும் தெரியாத இனமாகத் தமிழர்கள் இருக்கின்றமையும், இது குறித்த விழிப்புணர்வு தமிழ் அரசியல்வாதிகளுக்கு இல்லாமல் இருக்கின்றமையுமே இதற்குப் பிரதான காரணமாகும். உலகம் முழுவதும் இனப்படுகொலைக்குள்ளான இனங்கள் இது போன்ற விடயங்களைபல நூற்றாண்டுகள்கடந்தும் ஆவணப்படுத்தி வைத்திருக்கின்றன. மிகப்பெரிய இனப்படுகொலையின் பின்னர் இஸ்ரேலியர்கள் தமக்கான நாட்டைக் கட்டமைத்துக்கொண்டாலும், தம் மீது ஜேர்மனியர்கள் நடத்திய இனப்படுகொலையை நினைவுபடுத்தும் ஆவணங்களை, ஆவணக்காப்பகங்களில் இன்றும் வைத்திருக்கின்றனர். உலகப் போர்க்காலத்தில் அணுகுண்டு வீச்சினால் பாதிக்கப்பட்ட ஜப்பானியர்கள் அந்தப் பாதிப்பின் எச்சங்களை இன்றும் ஆவணப்படுத்தி வைத்திருக்கின்றனர். உலகம் நன்கு வளர்ச்சியடைந்துவிட்ட யுகத்தில், பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் இனப்படுகொலைக்குள்ளான இனமொன்று, அதற்கான ஆவணங்களைத் தவறவிட்டிருப்பது எவ்வளவு துயரமானது?

அடுத்து வட்டுவாகல் பாலம். இறுதிப் போரின் நாட்களை நினைவுகூறும் எவராலும் வட்டுவாகல் பாலத்தைத் தவிர்க்க முடியாது. பாலத்தைக் கடந்த பலர் இன்று உயிரோடில்லை. வலிந்து காணாமலாக்கப்பட்டு விட்டனர். பாலத்தில் இறுமருங்கிலும் இராணுவத்தால் சுடப்பட்ட நிலையில் இறந்து மிதந்தவர்களின் எண்ணிக்கை பல்லாயிரம். இவ்வளவு பெறுமதிமிகு நினைவுகளைக் கொண்டிருக்கும் வட்டுவாகல் பாலம் மிக விரைவில் மீளப் புனருத்தானம் செய்யப்படப்போகின்றது. அந்த பாலத்தை நீக்குவிட்டுப் புதிய பாலமொன்றை அமைத்துத் தரும்படி உள்ளூர் மக்களே அரசைக் கோரியிருக்கின்றனர்.

இப்படியாகதமிழ் இனப்படுகொலையின்பௌதீக சாட்சியங்களாக இருக்கின்ற பல விடயங்களும் விரைவாகவே அழிக்கப்பட்டு வருகின்றன. அனேகமாகத் தமிழினப் படுகொலையின் இருபதாம் ஆண்டு நினைவேந்தல் செய்யும் மேற்குறித்த எந்த நினைவேந்தல் எச்சங்களும் முள்ளிவாய்க்காலில் இருக்கப்போவதில்லை. சர்வதேச நிறுவனங்களும், ஊடகங்களும், தமிழர்களும் முள்ளிவாய்க்கால் எனப்படும் தமிழினப் படுகொலையின் குறியீட்டு நிலத்தை எப்படி மாற்றிவருகின்றனர் என்பதற்கான சில விடயங்கள்தான் இந்தப் பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன. அந்நிலம் அமைதியாகக் கிடந்து எதிர்கொள்ளும் சவால்கள், சதிகள் பலநூறு.

• • •

## சட்ட விரோத ... தொடர்ச்சி ...

வாய்ப்புக்காக பலர் புலம் பெயர்வுகளை சட்ட ரீதியாக சென்றாலும் சுற்றுலா விசாவில் செல்வதை தவிர்ப்பது பாதுகாப்பாகும்.

திருகோணமலை மாவட்டத்தின் தம்பலகாமம்பிரதேசசெயலகப்பகுதிக்குட்பட்ட புலம் பெயர்ந்தவர்களுக்கான சங்கங்களுக்கு இடையிலான முறை யான புலம்பெயர்தல் மற்றும் சுகாதார ரீதியான தொற்று நோய்கள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வொன்றும் 30.05.2024 ந் திகதி அன்று இடம் பெற்றது.

குறித்த விழிப்புணர்வு நிகழ்வை புலம் பெயர்ந்தவர்களுக்கான சர்வதேச அமைப்பு (IOM) மற்றும் தம்பலகாமம் பிரதேச செயலக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரிவு இணைந்து (30) தம்பலகாமம் பிரதேச செயலக மண்டபத் தில் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி அவர்க ளின் வழிகாட்டுதலுக்கிணங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பாதுகாப்பான புலம்பெயர்வு ஊடாக புலம் பெயர்தல் முறையான புலம்பெயர்வு மற்றும் சட்ட ரீதியான புலம் பெயர்வே சிறந்தது தொடர்பிலும் இதன் போது தெளிவூட்டப்பட்டன. குறித்த புலம் பெயர்வு மூலமாக தகாத உறவுகளை தவிர்த்தும் தொற்று நோய்களில் இருந்து பாதுகாப்பு பெறுவது தொடர்பிலும் விழிப்புணர்வூட்டப்பட்டது.

"பாதுகாப்பானதும் ஒழுங்கு முறையானதுமான புலம்பெயர்வினூடாக வளமான எதிர்காலம்" என்ற எண்ணக் கருவுக்கு அமைய இவ் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. வளர்முக நாடுகளுக்கு சுற்றுலா விசாவில் சென்று தொழில்களை மேற்கொள்ள முயற்சிப்பதும் கடல் வழி மூலமாக சர்வதேச நாடுகளுக்கு சட்ட விரோதமான புலம்பெயர்வுகளை ஏற்படுத்திக் கொள்வதும் பல பாதக விளைவுகளை ஏற்படுத்தும் என இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

புலம் பெயர்வின் போது இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு மூலமாக சட்ட ரீதியாக பதிவு செய்து பாதுகாப்பாக இடம் பெயர்வதும் நல்ல விடயமாக இங்கு தெளிவூட்டப்பட்டது.

எச் ஐ வி தொற்று நோய் மற்றும் நோய் பரவல் புலம் பெயர்வின் போது ஏற்படுகிறது இதனை தடுக்க எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பிலும் மாவட்ட பால்வினை நோய் தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி வைத்தியர் வி.ஸ்ரீகௌரிஸ்வரன் மற்றும் பொது சுகாதார பரிசோதகர் ஜெகன் ஆகியோர்கள் வளவாளர்களாக இணைந்து இதனை தெளிவுபடுத்தினர்.

முறையான புலம் பெயர்வு தொடர்பில் வளவாளராக IOM இன் திட்ட இணைப்பாளர் (மட்டக்களப்பு) திருமதி மயூரன் மேரி லெம்பேர்ட் கலந்து கொண்டு தெளிவூட்டினார்.

இவ்வாறான பல விழிப்புணர்வு நிகழ்வுகளை சர்வதேச அமைப்பான IOM மேற்கொண்டு வருகின்றது.

எனவே தான் ஒழுங்கு முறையான புலம் பெயர்வுகளை அமைத்து மக்களுக்கு விழிப்புணர்வுள்ளவர்களாக மாற்ற வேண்டும் என்பதே ஏகோபித்த எதிர்பார்ப்பாகும்.

• • •

## இழுபறி நிலை... தொடர்ச்சி ...

தவிர்க்கப்பட்டது. இவ்வாறாக வேதனத்தின் ஒரு பகுதியை அரிசியின் வடிவில் செலுத்துவது தொடர்ந்து வந்த காலப்பகுதியில் பெருந்தோட்ட வேதன முறையின் ஒரு முக்கிய பண்பாக மாறியது' என்ற வலியுறுத்தல்களும் இருந்து வருகின்றன.

சம்பள நிர்ணய சபையின் ஊடாக ஏற்கனவே தொழிலாளர்களின்சம்பளம்நிர்ணயிக் கப்பட்டது. இச்சபையில் தொழிலாளர்களுக்கு ஆகக்குறைந்த சம்பளத்தை தீர்மானிப்பதே சம்பள நிர்ணய சபையின் வரம்புக்குட்பட்ட அதிகாரமாகும். அரசாங்கத்தின் தலையீட்டின் காரணமாக சம்பள நிர்ணய சபைக் கூட்டம் நீண்ட காலத்துக்குகூட்டப்படாமல்இழுத்தடிக்கப்பட்டு வந்ததாகவும் தெரியவருகின்றது.



தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பளத்தைப் பெற்றுக் கொடுப்பதில் அனுபவ ரீதியான பிரச்சினைகள் பலவற்றையும் எதிர்நோக்கியதன் காரணமாக இதற்கு மாற்றீடாக கூட்டு ஒப்பந்த முறை முன்வைக்கப்பட்டது. எனினும் கூட்டு ஒப்பந்த முறையின் ஊடாகவும் தொழிலாளர்களின் சம்பள உயர்வு நடவடிக்கைகள் கேள்விக்குறியாகி வரும் நிலையில் கூட்டு ஒப்பந்தம் குறித்தும் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருவதும் தெரிந்ததாகும். மரண சாசனம், கூத்து ஒப்பந்தம் என்றெல்லாம் கூட்டு ஒப்பந்தத்தை பலரும் விமர்சித்து வருகின்றனர். கூட்டு ஒப்பந்தம் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பளத்தை பெற்றுக்கொடுக்க தவறியுள்ள நிலையில் இந்நடைமுறையில் மாற்றம் தேவை என்ற கருத்துக்களும் மேலெழுந்து வருகின்றன.

இதேவேளை கூட்டு ஒப்பந்த நடைமுறை வரவேற்கத்தக்கதென்றும் இதில் காணப்படும் தொழிலாளர்களுக்கு பாதகமான சரத்துக்கள் நீக்கப்பட்டு, தொழிலாளர்களின் நலன்களுக்கு வலுசேர்க்கும் சரத்துக்கள் உள்ளீர்க்கப்பட வேண்டுமென்றும் சிலர் கருத்து தெரிவித்துள்ளமையும் நோக்கத்தக்கதாகும். அத்தோடு 2003 ம் ஆண்டுக்குரிய கூட்டு ஒப்பந்தத்தில் உள்வாங்கப்பட்டுள்ள தொழிலாளர் நலன் சார்ந்த பல உரிமைகள், சலுகைகள் மறுக்கப்பட்டு வருவதை வன்மையாக ஆட்சேபிப்பதோடு , புதிய கூட்டு ஒப்பந்தத்துக்கு கம்பனிகள் முன்வர வேண்டும் என்று பெருந்தோட்ட தொழிற்சங்க கூட்டமைப்பின் பிரதித் தலைவர் எஸ். முருகையா தெரிவித்துள்ளார்.



பெருந்தோட்டத் தொழிலாளர்களின் பொருளாதார நெருக்கடிகள் நாளுக்குநாள் உக்கிரமடைந்து வரும் நிலையில் நியாயமான சம்பளத்தை பெற்றுக் கொடுக்கும் முனைப்புகள் இடம்பெற்று வருகின்றன. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1700 ரூபா வழங்கப்பட வேண்டுமென அழுத்தம் கொடுத்துவரும் நிலையில் அரசாங்கமும் இதற்கான அழுத்தத்தினை வழங்கி இருந்தது. 1350 ரூபா அடிப்படை சம்பளத்துடன் 1700 ரூபாவை பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளமாக வழங்குமாறு கடந்த ஏப்ரல் 30 ம் திகதி தொழில் ஆணையாளரால் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது. மே மாதம் முதலாம் திகதி சர்வதேச தொழிலாளர் தினத்தில் அரசாங்கம் இதனை உத்தியோகபூர்வமாக இ.தொ.கா. வின் மேதின மேடையில் அறிவித்திருந்தது.

### வாழ்க்கை செலவுப் புள்ளி

எனினும் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு விடயத்தில் முன்வைக்கப்பட்டுள்ள 1700 ரூபா சம்பள உயர்வு கோரிக்கை சாத்தியமற்றதென்று முதலாளிமார் சம்மேளனம் நிராகரித்துள்ளது. மேலும் 1200 ரூபாவை அடிப்படை சம்பளமாகவும், மேலதிக நிறை கிலோவுக்கு 60 ரூபாவையும் வழங்குவதற்கு தாம் இணங்குவதாக சம்மேளனம் தொழில் அமைச்சரிடம் தெரிவித்துள்ளது. தேயிலை உற்பத்தியில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி மற்றும் உலக சந்தையில் தேயிலைக்கான கேள்வி குறைவடைந்துள்ளதால், தேயிலைத் துறைக்கு ஏற்பட்டுள்ள சவால்கள் என்பவற்றின் அடிப்படையில் இந்த சம்பள அதிகரிப்பை வழங்குவது சாத்தியமற்றது.



இந்நிலையில் தொழிற்சங்கங்கள் தொடர்ச்சியாக இந்த சம்பள அதிகரிப்பை கோருவது நியாயமற்றது. தொழிற்சங்கங்கள் 75 வீத சம்பள அதிகரிப்பை கோருகின்றன. எனினும் 20 வீத சம்பள அதிகரிப்பையே எம்மால் வழங்கமுடியுமென்று முதலாளிமார் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

எவ்வாறெனினும் பெருந்தோட்டத் தொழிலாளர்சம்பளவிவகாரம் மென்மேலும் இழுபடும் சாத்தியக்கூறுகளே அதிகமாக தென்படுகின்றன. தொழிற்சங்கங்கள் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பை வலியுறுத்தி தொடர்ச்சியாக குரல் கொடுத்து வருகின்றன. என்றபோதும் இது உரிய சாதக விளைவுகளுக்கு வித்திடவில்லை.

தொழிற்சங்கங்கள் தொழிலாளர்களின் நாளாந்த வேதனத்தில் மாற்றம் கொண்டு வர மேற்கொண்ட முயற்சிகள் 1984 காலப் பகுதியிலேயே குறிப்பிடத்தக்களவு வெற்றி பெற்றுள்ளது. 1984 இல் சமசம்பளம், வாழ்க்கை செலவுப் புள்ளிக்கு ஏற்றவாறான சம்பள அதிகரிப்பு என்பன தொழிற்சங்கங்களுக்கு கிடைத்த வெற்றியாகும். பொருளாதார நெருக்கடி மற்றும் ஊதியப் பற்றாக்குறை காரணமாக பல தொழிலாளர்கள் மாற்றுத் தொழில்களை நாடிச் சென்றுள்ளனர்.

இந்நிலையில் தோட்டங்களில் தொழில் புரிவதற்கு தொழிலாளர் பற்றாக்குறை காணப்படுவதாகவும் இது தமக்கு பெரும் இடையூறினை ஏற்படுத்துவதாகவும் கம்பனிகள் கோஷமிடுகின்றன. இலங்கையில் அதிகரித்த வறுமையைக் கொண்டவர்களாக பெருந்தோட்ட மக்கள் காணப்படுகின்றனர். எனவே இவர்களின் பொருளாதார மேம்பாடு கருதி காத்திரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அரசின் நிவாரண உதவிகள் இம்மக்களுக்கு விஸ்தரிக்கப்படுவதோடு நியாயமான ஊதியமும் வழங்கப்பட வேண்டும்.




எனினும் வேதன அதிகரிப்பு தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தும்போது முரண்பாடான கருத்துக்களை முன்வைத்து அதனை தோற்கடிப்பதற்கான முயற்சிகளே மேலெழுந்து வருவதாக கண்டனங்கள் மேலெழுந்து வருகின்றன. இந்நிலையில் பொருளாதார நெருக்கடி காரணமாக சீர்குலைந்து வரும் பெருந்தோட்ட மக்களின் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்த அவர்களுக்கு நியாயமான சம்பளத்தைப் பெற்றுக் கொடுக்க கம்பனிகள் முன்வர வேண்டியது மிகவும் அவசியமாகும்.

• • •

## உக்ரைனுக்கு ... தொடர்ச்சி ...

தெரிவிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், கொழும்பில் இயங்கிவரும் மேற்படி நிறுவனத்தின் உண் மைத்தன்மை தொடர்பில் அறிய முயற்சித்த நிலையில் எந்த பதிலும் கிடைக்கவில்லை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ரஷ்யா உக்ரைனுக்கு இடையிலான போர் மூன்றாவது ஆண்டை அண்மிக்கும் நிலையில், உக்ரைனுக்கு ஆயுத உதவியை வழங்குவதாக பெல் ஜியம் மற்றும் ஸ்பெயின் தெரிவித்துள்ளது.

உக்ரைன் ஜனாதிபதி விளாடிமிர் ஜலன்ஸ்கி ஸ்பெய்ன்,பெல்ஜியம் மற்றும் போர்த்துக்கல் போன்ற நாடுகளில் இரு நாட்கள் விஜயத்தை மேற்கொண்டுள்ள நிலையில் இந்த இணக்கம் வெளியிடப்பட்டுள்ளது. இதேவேளை, உக்ரைனுக்கு எதிரான போரில் ரஷ்யா பின்னடைவை சந்தித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தேர்தலுக்கான ... தொடர்ச்சி ...

டி.பி., பிள்ளையானின் கட்சி, வியாழேந்திரன், மற்றும் அங்கஜன் இராமநாதன் ஆகியோர் ரணிலைத்தான் ஆதரிப்பார்கள். அவர்களுடைய இருப்புக்கு அது தவிர்க்க முடியாததது.

தேசியம் பேசும் தமிழ்க் கட்சிகள் இதுவரை தமது நிலைப்பாட்டை அறிவிக்கவில்லை. பொது வேட்பாளரை களமிறக்குவதற்கான முயற்சிகளை அவை சிவில் அமைப்புக்களுடன் இணைந்து தீவிரமாக முன்னெடுக்கின்றன. ஆனால், பொது வேட்பாளர்என்றகொள்கையில்இணைந்திருக்கும் தமிழ்க் கட்சிகள் அனைத்தும் இந்த விடயத்தில் எந்தளவுக்கு உறுதியுடன் இருக்கின்றன என்ற கேள்வி உள்ளது. அவ்வாறு பொது வேட்பாளர் ஒருவர் நிறுத்தப்பட்டால், தமிழ் மக்களை அதற்குப் பின்னால் கொண்டுவருவதற்கான உபாயங்கள் எந்தளவுக்குள்ளன என்ற கேள்வியும் உள்ளது.

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.